Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | செவ்வாய்கிழமை, ஏப்ரல் 09, 2024 | இதழ் 269

# சென்னையில் அமீரின் அலுவலகம், உள்பட 35 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சென்னை, 09 ஏப்ரல் 2024: சென்னையில் டைரக்டர் அமீரின் அலுவலகம் உள்பட 35க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் ரூ.2,000 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தலைமறைவாக இருந்த முன்னாள் தி.மு.க. நிர்வாகியும், திரைப்பட தயாரிப்பாளருமான ஜாபர் சாதிக்கை போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கடந்த மாதம் 9ம் தேதி டெல்லியில் கைது செய்தனர். இதைத் தொடர்ந்து ஜாபர் சாதிக்கின் கூட்டாளிகள் 4 பேர் கைது செய்யப்பட்டனர். ஜாபர் சாதிக் உள்பட 5 பேரின் காவல் 16 ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஜாபர் சாதிக்குடன் தொடர்பில் இருந்தவர்களிடமும் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் டைரக்டர் அமீர் இயக்கத்தில் வெளியான இறைவன் மிகப்பெரியவன் என்ற திரைப்படத்தையும் ஜாபர் சாதிக் தயாரித்துள்ளார்.

டைரக்டர் அமீர் கைதான ஜாபர் சாதிக்கின் நண்பர் என்பதும் இருவரும் இணைந்து காபி ஷாப் ஒன்றை தொடங்கியதாகவும் தகவல் வெளியாகின. இதையடுத்து, டைரக்டர் அமீருக்கு நோட்டீஸ் அனுப்பிய போதைப்பொருள் தடுப்பு பிரிவு விசாரணைக்கு 2ம் தேதி டெல்லியில் உள்ள அலுவலகத்தில் நேரில் ஆஜராகும்படி உத்தரவிட்டது. இந்த நோட்டீசையடுத்து, டெல்லியில் உள்ள போதைப்பொருள் தடுப்பு பிரிவு அலுவலகத்தில் அமீர் நேரில் ஆஜரானார். பல மணிநேரம் நடைபெற்ற விசாரணையில் அவரிடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. விசாரணைக்கு பின்









டைரக்டர் அமீர் சென்னை திரும்பினார்.

இந்நிலையில், போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஜாபர் சாதிக் தொடர்புடைய இடங்களில் இன்று அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

இதில் சென்னை சாந்தோம் பகுதியில் உள்ள ஜாபர் சாதிக் இல்லத்தில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அவருடைய நண்பர்கள் மற்றும் அவருக்கு நெருக்கமான தொழிலதிபர்களுக்கு சொந்தமான இடங்களிலும், தி.மு.க. முக்கியப் புள்ளிகளின் வீடு மற்றும் அலுவலகங்களிலும் சோதனை நடைபெற்று வருகிறது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் சம்பாதித்த பணத்தை, அமீருக்கு கொடுக்கப்பட்டதா என்ற கோணத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகள் தி.நகரில் உள்ள டைரக்டர் அமீரின் அலுவலகத்தில் சோதனை மேற்கொண்டனர்.

ஜாபர் சாதிக்குடன் சினிமா தொடர்பான வேலைகளில் ஈடுபட்டு வந்த கொடுங்கையூர் பகுதியைச் சேர்ந்த ஒருவர் இல்லத்திலும், புரசைவாக்கம் பகுதியில் ஒரே முகவரியில் உள்ள பல்வேறு அலுவலகத்திலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் ஜாபர் சாதிக்குக்கு சொந்தமான 5 நிறுவனங்களின் பங்குதாரர்கள் வீடுகள், கீழ்ப்பாக்கத்தில் ஷேக் முகமது நாசர் என்பவரின் வீடு, நீலாங்கரையில் உள்ள புகாரி ஓட்டல் நிறுவன உரிமையாளரின் வீடு என சென்னையில் 35க்கும் மேற்பட்ட இடங்களில் இன்று காலை முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

டெல்லியில் உள்ள போதைப்பொருள் தடுப்பு பிரிவு அலுவலகத்தில் 2 ந்தேதி அமீர் நேரில் ஆஜரானார். பல மணிநேரம் நடைபெற்ற விசாரணையில் அவரிடம் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. விசாரணைக்கு பின் டைரக்டர் அமீர் சென்னை திரும்பினார். இந்நிலையில், விசாரணைக்கு மீண்டும் ஆஜராகும்படி டைரக்டர் அமீருக்கு போதைப்பொருள் தடுப்பு பிரிவு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கடந்த 3 ஆண்டுக்கான வங்கி பரிவர்த்தனை, வாங்கப்பட்ட சொத்து விவரங்கள் தொடர்பான ஆவணங்களுடன் டெல்லியில் உள்ள அலுவலகத்தில் நேரில் ஆஜராகும்படி அமீருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. ஜாபர் சாதிக் உடன் தொழில் ரீதியில் கூட்டாளியாக இணைந்தது எப்படி? என்ற விவரத்தையும் அமீரிடம் போதைப்பொருள் தடுப்பு பிரிவு கேட்டுள்ளது. அதேவேளை, விசாரணைக்கு ஆஜராக கால அவகாசம் தரும்படி போதைப்பொருள் தடுப்பு பிரிவுக்கு டைரக்டர் அமீர் இமெயில் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனிடையே, போதைப்பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக டைரக்டர் அமீரின் அலுவலகம் உள்பட சென்னையில் பல்வேறு இடங்களில் இன்று அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ம.க. வேட்பாளர் தங்கர் பச்சானுக்கு கிளி ஜோசியம் பார்த்தவர் கைது




சென்னை, 09 ஏப்ரல் 2024: பா.ம.க. வேட்பாளர் தங்கர் பச்சானுக்கு கிளி ஜோசியம் பார்த்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடலூர் பாராளுமன்ற தொகுதியில் பா.ம.க. வேட்பாளராக திரைப்பட இயக்குனர் தங்கர் பச்சான் போட்டியிடுகிறார். இந்த நிலையில் அவர் கூட்டணி கட்சியினருடன் சேர்ந்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

சுட்டெரிக்கும் வெயிலுக்கு ஓய்வு எடுப்பதற்காக வழியில் உள்ள ஒரு மரத்தடி நிழலில் ஒதுங்கினார். அந்த மரத்தடியில் கிளி ஜோதிடம் பார்க்கும் ஒருவர் அமர்ந்து ஜோசியம் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதை பார்த்த தங்கர்பச்சான், கிளி ஜோதிடரின் அருகில் அமர்ந்து, நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் நான் வெற்றி பெறுவேனா?



என, ஆர்வமாக கேட்டார். கூண்டில் இருந்த கிளியை வெளியே அழைத்து, தங்கர் பச்சான் பெயருக்கு சீட் எடுத்து தருமாறு ஜோதிடர் கூறினார்.

கிளி, அய்யனார் படத்தை எடுத்துக் கொடுத்து, தங்கர் பச்சானை ஒரு பார்வை பார்த்துவிட்டு கூண்டுக்குள் திரும்பியது. வெற்றி நிச்சயம் என கிளி ஜோதிடர் அடித்து கூற, நமக்கு அய்யனார் ஆசீர்வாதம் வழங்கி விட்டார். இனிமேல் கவலையில்லை' என, தங்கர் பச்சான் மகிழ்ச்சியாக வாகனத்தில் ஏறி பிரச்சாரத்தை தொடர்ந்தார்.

இந்நிலையில், தங்கர் பச்சானுக்கு கிளி ஜோசியம் பார்த்த வீடியோ வைரலான நிலையில் ஜோசியம் பார்த்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். தென்னம்பாக்கம் கோவில் அருகே ஜோசியம் பார்த்த 2 கிளி ஜோசியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்த 4 கிளிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளியை கூண்டில் அடைத்து வைத்து ஜோசியம் பார்ப்பது சட்டப்படி குற்றம் என வனத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்கிழமை,
ஏப்ரல் 09, 2024

# ஆர் எம் வீரப்பன் அவர்களின் மறைவு - இரங்கல் செய்தி

சென்னை, 09 ஏப்ரல் 2024: அறநிலையத்துறையை ஆண்ட மனிதர். சதம் தொட்ட தனித்துவமானவரின் மறைவு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஒளிர்ந்து மறைந்த நட்சத்திரத்தின் ஆயுள் போன்றது. திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான திரு.ஆர்.எம். வீரப்பன் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்தேன்.

திரு. எம்.ஜி.ஆர் அவர்களின் சத்யா மூவீஸ் நிறுவனத்தைத் திறம்பட நிர்வகித்து, எம்.ஜி.ஆர் தொடங்கி, ரஜினிகாந்த், கமல் ஹாசன், சத்யராஜ் என பல நட்சத்திரங்களுடன், தமிழ்த்திரையுலகிற்கு பல்வேறு வெற்றிப் படங்களைத் தந்து, சிறந்த தயாரிப்பாளராக, அவர் தலைமையில் பல ஆச்சரியங்களை நிகழ்த்திக் காட்டியது சத்யா மூவிஸ்.

அரசியல், திரைத்துறை, தமிழ்த்துறை என அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்தவர் திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்கள். ஒவ்வொரு நாளும் வேறொரு நாள் தான். நமக்கான நாளாக நாளை அமைய துளி கூட வாய்ப்பில்லை. ஆனாலும் நம்பிக்கை என்பது மட்டுமே நம்மை வாழச் சொல்கிறது. நாளை என்ற நம்பிக்கையை விதைத்துச் சென்ற தங்களின் வாழ்க்கையை முன் வைத்துக் கொள்கிறோம். நிகழ்வின் ஒவ்வொரு பொழுதிலும் எங்களை நினைவுபடுத்திய சத்யா மூவிஸைப் போல உங்களின் நினைவுகளும் நீடித்திருக்கும். வாழ்ந்திருங்கள் ... எத்தனை வருடங்கள் கடந்தாலும். தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்க தலைவர் பாரதிராஜா.

# ‘வங்காள விரிகுடா - குறுநில மன்னன்‘ திரைப்பட இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா

சென்னை, 09 ஏப்ரல் 2024: மாதா பிதா ஃபிலிம் பேக்டரி வழங்க, தமிழ் திரையுலகில் முதன்முறையாக




கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இசை, ஒளிப்பதிவு, கலை, நடனம், சண்டை பயிற்சி (தனி), உடைகள், ஸ்டில்ஸ், ஒப்பனை, பின்னணி பாடகர், பின்னணி இசை, புரொடக்ஷன் டிசைனர், டைட்டிலிங், சிகை அலங்காரம், வெளிப்புற படப்பிடிப்பு தள நிர்வாகி, தயாரிப்பு, டைரக்ஷன் இவற்றுடன் கதாநாயகனாக குகன் சக்வர்த்தியார் நடித்திருக்கும் திரைப்படம் 'வங்காள விரிகுடா குறுநில மன்னன்'. நம் மக்களின் வாழ்வியலை படம்பிடிக்கும் அருமையான காவியமாக, அப்துல்கலாமின் கனவு காணுங்கள் எனும் கருத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்படம், விரைவில் திரைக்கு வரவுள்ள நிலையில், இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா திங்கட்கிழமை அன்று சென்னை கலைஞர் அரங்கத்தில், படக்குழுவினருடன் சிறப்பு விருந்தினர்கள், திரை பிரபலங்கள் கலந்துகொள்ள, பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. 'வங்காள விரிகுடா குறுநில மன்னன்' இசைத்தட்டினை சிறப்பு விருந்தினர்கள் வெளியிட குகன் சக்வர்த்தியாரின் தாய் மற்றும் தந்தை பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் போது குகன் சக்வர்த்தியாரின் பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் முக்கிய அம்சங்கள் வருமாறு...

எழுத்தாளர் இயக்குநர் டி கே சண்முக சுந்தரம் பேசியதாவதுஞ் ஒரு இனிமையான விழா. 21 கிராப்ட்களை கையாண்டு அசத்தியிருக்கிறார் குகன் சக்வர்த்தியார். திரைப்படக் கல்லூரியில் படித்தவர், அதனால் தான் 21 கிராப்ட்களை கையாண்டுள்ளார். அவரிடம் அதற்கான அறிவு இருக்கிறது. ஒளிப்பதிவு செய்துள்ளார், பாடல் எழுதியுள்ளார், தத்துவ பாடலும் பாடியுள்ளார் பல விதங்களில் அசத்தியுள்ளார். இந்தப்படம் என்ன ஜானர் எனத் தெரியவில்லை, மர்மக்கதையோ என்று நினைதேன். தலைப்பு வித்தியாசமாக பல சிந்தனைகளை தூண்டி விடுகிறது. ஆனால் சமூக சிந்தனையை பேசியிருப்பது டிரெய்லரில் தெரிகிறது. மன்னர்கள் ஆண்ட வங்காள விரிகுடா, இப்போது குகன் சக்வர்த்தியார் வசமாகியுள்ளது. இந்தப்படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமையட்டும். ஒரு படைப்பு மக்களுக்கு பயன்பட வேண்டும், அம்மாதிரியான படைப்பாக இப்படைப்பு இருக்குமென நம்புகிறேன். குகன் சக்வர்த்தியாருக்கு வாழ்த்துகள். எழுத்தாளர் கலைமாமணி பிரபாகரன் பேசியதாவதுஞ் முயற்சி திருவினையாக்கும் எனும் பழமொழிக்கு உகந்தவர் குகன் சக்வர்த்தியார். எப்போது சந்தித்தாலும் இப்படம் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருப்பார். இப்படத்திற்காக மிக கடுமையாக உழைத்துள்ளார். முத்துராமனின் மகன் கார்த்திக்கை பாரதிராஜா அழைத்து நடிக்க வைத்த போது, இனிமேல் நீ பபூன், ஒரு எண்டர்டெயினர், இயக்குநர் என்ன சொன்னாலும் அதைத்தட்டாமல், மக்களுக்கு பிடிக்கும் படி செய்ய வேண்டுமென சொன்னதாக சொல்வார்கள். அது போல் குகன் தன்னை மாற்றிக்கொண்டு இப்படத்தில் அருமையாக நடித்துள்ளார். நாம் நம்பும் விசயத்தில் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். அது போல் இப்படத்திற்காக உழைத்திருக்கும் குகன் மிகப்பெரிய வெற்றி பெற வாழ்த்துகள், நன்றி. பாடலாசிரியர் சினேகன் பேசியதாவதுஞ்

இந்த மேடை மிக முக்கியமான மேடை, வெற்றி பெற்றவர்களை பற்றிப் பேசும் மேடையை விட வித்தியாசமான மேடை எனக் கருதுகிறேன். அதற்கு காரணம் மாப்பிள்ளை குகன் தான். அவருடன் பழக ஆரம்பித்த காலத்திலிருந்து, இன்று வரை ஒரு வெள்ளந்தியாக உற்சாகமாக இயங்கும் மனிதனாகவே அவரைப் பார்த்துள்ளேன். அவரது அயராத உழைப்பு தான் அவருக்கு இந்த உயரத்தை, மேடையை தந்துள்ளது. பல கஷ்டங்களுக்கு இடையில் இந்தப்படத்தை எடுத்துள்ளார். எத்தனை பிரச்சனை என்றாலும் குகன் எப்போதும் உற்சாகமாகவே இருப்பார். அது எப்படி என்று ஆச்சரியமாக இருக்கும். சினிமா எல்லோருக்கும் வெற்றியை தந்துவிடுவதில்லை, ஆனால் அதில் விடா முயற்சியாக இருந்து வெற்றி பெற்றுள்ளார் குகன். உழைப்பவன் என்றும் தோற்பதில்லை, வாழ்த்துகள். நெட்பிளிக்ஸ் தமிழ்நாடு சங்கர் பேசியதாவதுஞ்

குகனுக்கு எல்லையே கிடையாது, ஒரே ஒரு ஆள் எல்லாவற்றையும் செய்வது மிகப்பெரிய சாதனை. அவருக்கு இன்னமும் நிறைய திறமை இருக்கிறது, அவர் மிகப்பெரிய வெற்றி பெற வாழ்த்துகள். தயாரிப்பாளர் ஜெசிகா பேசியாதாவதுஞ்

நம்மால் ஒரு துறையிலேயே சரியாக வேலை செய்ய முடியாமல் தடுமாறுகிறோம். இந்த நிலையில் 21 கிராப்ட்களை கையாண்டு அசத்தியிருக்கிறார் குகன். அவரது திறமையை பாராட்டி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இப்படம் மிகப்பெரிய வெற்றி பெற உங்கள் ஆதரவைத் தர வேண்டும், நன்றி. மிராக்கல் மூவீஸ் தயாரிப்பாளர் திருநாவுக்கரசு பேசியதாவதுஞ்

இந்தப்படத்தில் 21 கிராப்ட்களையும் செய்து அசத்தியிருக்கிறார் குகன். படம் பார்த்தேன், அருமையான கருத்தை சொல்லியிருக்கிறார். பாடல்கள் அருமை. ரெட் ஜெயண்ட் நிறுவனத்திடம் இப்படத்தை வெளியிட வேண்டி பேசினோம், அவர்கள் படம் பிடித்துள்ளது இன்னும் ஒரு வாரத்தில் வெளியீடு பற்றி அறிவிக்கிறோம் என நம்பிக்கை தந்துள்ளனர். எல்லோருக்கும் வாழ்த்துகள் நன்றி. கருடானந்த சுவாமிகள் பேசியதாவது...

தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி. நாம் இருக்கும் துறையில் சிறப்பாக இயங்குவது தான் நம் சிறப்பு, அந்த வகையில் திரைத்துறையில் 21 கிராப்ட்களை கையாண்டு அசத்தியிருக்கிறார் குகன். குகனை எனக்கு பல காலமாகத் தெரியும், கடவுள் நம்பிக்கை இல்லையென்றாலும் மிகவும் நட்போடு பழகுபவர். ஒரு சந்திப்பில் வங்காள விரிகுடா படத்தை எனக்கு போட்டுக் காண்பித்தார், அப்துல் கலாமின் சில காட்சிகள் என்னை நெகிழச் செய்தன. ஒரு காலத்தில் பாக்யராஜ், டி ராஜேந்தர் என, எல்லா கலைகளையும் கையாளும் திறமையாளர்களைப் பார்த்திருக்கிறோம் ஆனால் இப்போது அப்படியில்லை, இன்றைய காலகட்டத்தில் 21 கிராப்ட்களை கையாண்டிருப்பது மிகப்பெரிய விஷயம். அதிலும் சாதித்து காட்டியுள்ளார் குகன். எனக்கு குரு ஸ்தாணத்தை தந்து என்னை வாழ்த்த அழைத்து வந்துள்ள குகனுக்கு என் வாழ்த்துகள். நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் உங்களை ஜெயிக்க வைக்க ஒரு மந்திரம் இருக்கிறது அது மாதா பிதா தான். தாய் தந்தையை போற்றுங்கள் உங்களுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைக்கும். எல்லோரும் இப்படத்திற்கு தங்கள் பரிபூரண ஆசிர்வாதத்தை தர வேண்டுகிறேன், நன்றி. குகன் சக்கரவர்த்தியார் பேசியதாவது... எனக்கு பிடித்த ஒரு விஷயத்தை உங்களிடம் கொண்டு வர நினைத்தேன், அது தான் இப்படம். பெரியார், அண்ணா, கலைஞர், ஸ்டாலின், அப்துல்கலாம் என அனைவரையும் ஒரே போஸ்டரில் கொண்டு வரும் ஐடியா தான் இந்தப்படம். அப்துல்கலாமின் கனவு காணுங்கள் எனும் கருத்தை மையமாகக் கொண்டு இப்படம் உருவாகியுள்ளது. என்னை மாதிரி வாழாதீர்கள், இவர்கள் மாதிரி வாழுங்கள் என சொல்வது தான் இந்தப்படம். புரட்சித்தலைவர், புரட்சித்தலைவி, கலைஞர், அண்ணா எல்லோரும் வாழும் இடம் வங்காள விரிகுடா. அது போல் இந்தப்படமும் வாழும். இந்தப்படத்தில் முதல்வருக்கு ஒரு கோரிக்கை வைத்துள்ளேன். அப்துல் கலாம் மீது எனக்கு ஒரு அதிருப்தி இருக்கிறது என படத்தில் காட்சி வைத்துள்ளேன், அதை எல்லோரும் கண்டித்தார்கள். ஆனால் அது எதற்கு என படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். கலைஞர் பேசிய இந்த மேடையில் நானும் இன்று பேசுகிறேன் என்பதே எனக்கு பெருமை தான். காசு உள்ளவன் எல்லாம் படமெடுத்து விட முடியாது, அறிவு வேண்டும். நல்ல படம், அருமையான கதை, நல்ல பாடல்கள் என படம் நன்றாக வந்துள்ளது. படம் நன்றாக இருந்தால் நீங்கள் பாராட்டுவீர்கள். எந்த விஷயமும் எளிதாக நடந்து விடாது. நான் உழைக்கிறேன், பிழைக்கிறேன், வாழ்த்துங்கள், நன்றி.

# நிதியாண்டு 24-ல் 960 கோடி என்ற மிக உயர்ந்த வருவாயுடன் முந்தைய ஆண்டைவிட 141% வளர்ச்சியினை பதிவு செய்திருக்கும் ஜென்சால் இன்ஜினியரிங்!

சென்னை, 09 ஏப்ரல் 2024: புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பிரிவில் ஒரு முன்னணி நிறுவனமான ஜென்சால் இன்ஜினியரிங் லிமிடெட், 2024, மார்ச் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டில் இயக்க செயல்பாடுகளிலிருந்து ரூ. 960 கோடி (தற்காலிகமான மற்றும் மற்றும் தணிக்கை செய்யப்படாத) என்ற வருவாய் ஈட்டப்பட்டிருப்பதை அறிவித்திருக்கிறது. சூரிய ஒளி மின்சக்தி, பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (ஈ பி சி) சேவைகள் மற்றும் மின்வாகன போக்குவரத்து தீர்வுகளில் சிறப்பு கவனம் செலுத்திவரும் இந்நிறுவனத்தின் மிக அதிகமான வருவாய் இதுவே. முந்தைய நிதியாண்டோடு ஒப்பிடுகையில் 141% என்ற வளர்ச்சி விகிதத்துடன் இந்த பாராட்டுதலுக்குரிய சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. முந்தைய ஆண்டில் இந்நிறுவனத்தின் வருவாய் ரூ. 398 கோடியாக இருந்தது. ஜென்சாலின் மிகச்சிறப்பான இந்த

GENSOL

GENSOL ENGINEERING LIMITED

செயல்பாடு, இத்தொழில்துறையில் ஒரு முன்னணி நிறுவனம் என்ற அதன் அந்தஸ்தை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது; புதிதாக உருவாகும் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்துவதிலும் மற்றும் அதன் அக்கறை பங்காளர்களுக்கு மதிப்பை வழங்குவதிலும் இதன் சிறப்பான திறனை இது நேர்த்தியாக வெளிப்படுத்துகிறது. ஜென்சால் இன்ஜினியரிங் லிமிடெட்-ன் சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநரான திரு. அன்மோல் சிங் ஜக்கி, நிதியாண்டு 24-ல் சிறப்பான பதிவு குறித்து கூறியதாவது, “2024 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற எமது வருவாய் ஈட்டல் குறித்த ஊடகவியலாளர் கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட சுட்டிக்காட்டல்கள் மற்றும் எதிர்பார்ப்புகளையும் விஞ்சும் வகையில் எமது நிறுவனத்தின் நிதி செயல்பாடு அதன் வலுவான மற்றும் சிறப்பான வளர்ச்சி விகிதத்தை வலுவாக பிரதிபலிக்கிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக எமது அந்தஸ்தை இச்சாதனை மேலும் வலுப்படுத்துகிறது; வளர்ச்சி மீது நாங்கள் கொண்டிருக்கும் தளராத பொறுப்பினையும், அர்ப்பணிப்பையும் இது கோடிட்டு காட்டுகிறது. எமது வெற்றிக்கு இன்றியமையாத அம்சமான தொடர்ச்சியான ஆதரவுக்காக நிறுவனத்தின் பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஜென்சால் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். நிறுவனத்திற்கு மதிப்பையும் மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சியினையும் வழங்குவது மீது எங்களது அர்ப்பணிப்பும், கடமை உணர்வும் இனியும் தொடர்ந்து இருக்கும்”.

சில நாட்களுக்கு முன்பு, ஜென்சால் இன்ஜினியரிங் லிமிடெட்-ன் துணை நிறுவனமான ஸ்கார்பியஸ் டிராக்கர்ஸ் இந்தியா, ஜப்பான், சவுதி அரேபியா மற்றும் உகாண்டா ஆகிய நாடுகளில் ஒப்பந்த ஆர்டர்களின் கீழ் 1000 எம் டபிள்யூ + என்ற சிறப்பான மைல்கல்லை எட்டி சாதனை புரிந்திருப்பதை பெருமையுடன் அறிவித்திருந்தது. உலகளவில் சோலார் டிராக்கிங் தொழிற்பிரிவில் ஒரு முக்கிய நிறுவனம் என்ற அதன் அந்தஸ்தை இச்சாதனை மேலும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

# தங்கம் சினிமாஸ் எஸ் தங்கராஜ் மற்றும் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் சி வி குமார் தயாரிப்பில் பரத் மோகன் இயக்கத்தில் ‘இன்று நேற்று நாளை 2‘

சென்னை, 09 ஏப்ரல் 2024: திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் பேனரில் சி வி குமார் தயாரிப்பில் 2015ம் ஆண்டு வெளிவந்த 'இன்று நேற்று நாளை' அனைத்து தரப்பு ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற திரைப்படம் ஆகும். இதன் இயக்குநர் ரவிக்குமார், சிவகார்த்திகேயன் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'அயலான்' வெற்றி படத்தையும் இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் ஒன்பது வருடங்களுக்கு பிறகு 'இன்று நேற்று நாளை' இரண்டாம் பாகம் குறித்த அறிவிப்பு தற்போது தற்போது வெளியிடப்பட்டுள்ளது. தங்கம் சினிமாஸ் எஸ் தங்கராஜ் மற்றும் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் சி வி குமார் இணைந்து தயாரிக்கும் இந்த திரைப்படத்திற்கு 'இன்று



நேற்று நாளை 2' என்று பெயரிடப்பட்டுள்ளது. ரவிக்குமார் எழுத்தில் உருவாகும் இந்த புத்தம் புதிய, சுவாரசிய காலப்பயணத் திரைப்படத்தை பரத் மோகன் இயக்குகிறார். சி வி குமாரிடம் 'மாயவன்' திரைப்படத்தில் இணை இயக்குநராக பணியாற்றிய இவர், 'இக்லூ' மற்றும் 'இப்படிக்கு காதல்' உள்ளிட்ட திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

'ரஜினிகாந்த்', 'இப்படிக்கு காதல்', 'பொய்க்கால் குதிரை' உள்ளிட்ட திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த பல்லு 'இன்று நேற்று நாளை 2' படத்திற்கு ஒளிப்பதிவு செய்கிறார். நடிகர்□கள் மற்றும் இதர தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் பரத் மோகன், "ஒரு புதிய கதைக்கருவோடு 2015ல் வெளியான 'இன்று நேற்று நாளை' மக்களை கவர்ந்து பெரிதும் பேசப்பட்டது. அதன் இரண்டாம் பாகத்தை, அதுவும் அத்திரைப்படத்தை தயாரித்த சி வி குமார் அவர்கள் தயாரிப்பிலும், இயக்குநர் ரவிக்குமார் எழுத்திலும் இயக்குவது பெரும் மகிழ்ச்சி. காலப்பயண கதையான 'இன்று நேற்று நாளை 2' திரைப்படமும் ரசிகர்களின் இதயங்களில் இடம் பிடிக்கும்," என்று கூறினார். தங்கம் சினிமாஸ் எஸ் தங்கராஜ் மற்றும் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் சி வி குமார் தயாரிப்பில் இயக்குநர் ரவிக்குமார் எழுத்தில் பரத் மோகன் இயக்கத்தில் உருவாகவுள்ள 'இன்று நேற்று நாளை 2' திரைப்படத்தின் படப்பிடிப்பு வரும் ஜூன் மாதம் தொடங்கவுள்ளது.

# இயக்குநர் ஹரியின் குட்லக் ஸ்டூடியோஸ் இரண்டாம் ஆண்டு துவக்கம்

சென்னை, 09 ஏப்ரல் 2024: கமர்ஷியல் சினிமாவில் தனக்கென தனி பாணி அமைத்து தனது வெற்றி படங்களின் எண்ணிக்கையை தொடர்ந்து அதிகரித்து வரும் இயக்குநர் ஹரி, டப்பிங், படக்கோர்ப்பு (மிக்ஸிங்), மற்றும் படத்தொகுப்பு (எடிட்டிங்) உள்ளிட்ட போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகளை திரையுலகினர் சிறப்பாக மேற்கொள்வதற்காக அதிநவீன வசதிகள் கொண்ட குட்லக் ஸ்டுடியோஸை கடந்த வருடம் தொடங்கினார். கடந்த ஒரு வருடமாக மேற்கண்ட சேவைகளை திறம்பட வழங்கி வந்த குட்லக் ஸ்டுடியோஸ், இன்று இரண்டாம் ஆண்டுக்குள் வெற்றிகரமாக அடி எடுத்து வைத்துள்ளது. இதை கொண்டாடும் விதமாக, 5.1 மிக்ஸிங்



மற்றும் டப்பிங் வசதி கொண்ட புதிய ஸ்டுடியோவை இயக்குநர் ஹரி தொடங்கினார். அதிநவீன தொழில்நுட்ப வசதிகளை குறைந்த செலவில் நிறைந்த தரத்தில் திரையுலகத்திற்கு வழங்குவதே குட் லக் ஸ்டுடியோஸ் தொடங்கப்பட்டதன் நோக்கம் என்று கூறிய இயக்குநர் ஹரி, தனக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதற்கிடையே, நடிகர் விஷால் மற்றும் இயக்குநர் ஹரி இணைந்துள்ள 'ரத்னம்' திரைப்படம் வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது. இப்படத்தின் பாடல்கள் பெரும் வரவேற்பை பெற்று குறிப்பிடத்தக்கது. 'தாமிரபரணி' மற்றும் 'பூஜை' சூப்பர் ஹிட் படங்களுக்கு பிறகு நடிகர் விஷால் மற்றும் இயக்குநர் ஹரி ஆகியோர் ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் கார்த்திகேயன் சந்தானம் மற்றும் ஜீ ஸ்டுடியோஸ் சவுத் இணைந்து தயாரிக்கும் 'ரத்னம்' திரைப்படத்திற்காக மீண்டும் இணைந்துள்ளனர். இன்வீனியோ ஆரிஜனின் அலங்கார் பாண்டியன் மற்றும் கல்யான் சுப்பிரமணியம் இப்படத்தின் இணைத் தயாரிப்பாளர்கள் ஆவர். பிரியா பவானிஷங்கர் இப்படத்தின் நாயகியாக நடித்துள்ளார். தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். ஏப்ரல் 26 அன்று 'ரத்னம்' திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவரும் விதத்தில் திரைப்படம் உருவாகியுள்ளதாக ஹரி தெரிவித்துள்ளார்.

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இராதாகிருஷ்ணன் பார்த்திபனின் புதிய சாகச திரில்லர் திரைப்படம் ‘டீன்ஸ்‘ டிரெய்லர் மற்றும் இசை புதுமையான முறையில் வெளியீடு

## திரையரங்கில் நான்கு காட்சிகளாக இசை வெளியிடப்பட்டு புதிய உலக சாதனை, டிரெய்லரை இயக்குநர் மணிரத்னம் வெளியிட்டார்

## பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 13 இளம் வயதினருக்கு பாராட்டு தெரிவித்த ‘டீன்ஸ்‘ படக்குழு



சென்னை, 09 ஏப்ரல் 2024: உலகிலேயே முதல் முறையாக திரையரங்குகளில் தணிக்கை சான்றிதழ் உடன் முதல் பார்வை வெளியிடப்பட்டு சாதனை படைத்த இராதாகிருஷ்ணன் பார்த்திபனின் முற்றிலும் மாறுபட்ட, குழந்தைகளை மையமாகக் கொண்ட சாகச திரில்லரான 'டீன்ஸ்' திரைப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் சென்னையில் சனிக்கிழமை அன்று வெளியிடப்பட்டது. டிரெய்லரை இயக்குநர் மணிரத்னம் வெளியிட்ட நிலையில், 'டீன்ஸ்' திரைப்படத்தின் இசை சென்னை கமலா திரையரங்கில் நான்கு காட்சிகளாக தொடர்ந்து வெளியிடப்பட்டு புதிய உலக சாதனையை படைத்துள்ளது. இதை தொடர்ந்து, ஒரே நாளில் ஒரே இடத்தில் அதிக இசை வெளியீட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட படம் என்பதற்கான சான்றிதழ் 'டீன்ஸ்' திரைப்படத்திற்கு உலக சாதனைகள் சங்கத்தால் வழங்கப்பட்டது. பதிமூன்று குழந்தைகளை மையமாகக் கொண்ட கதை என்பதால் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த 13 இளம் வயதினருக்கு நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 'டீன்ஸ்' படக்குழு நேரில் பாராட்டு தெரிவித்தது. கால்டுவெல் வேள்நம்பி, டாக்டர் பாலசுவாமிநாதன், டாக்டர் பின்ச்சி ஸ்ரீநிவாசன், ரஞ்சித் தண்டபாணி மற்றும் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் ஆகியோர் இப்படத்தை தயாரித்துள்ளனர். பயாஸ்கோப் டிரீம்ஸ் எல் எல் பி மற்றும் அகிரா ப்ரொடக்ஷன்ஸ் பேனரில் 'டீன்ஸ்' தயாராகியுள்ளது. கீர்த்தனா பார்த்திபன் அக்கினேனி இதன் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் ஆவார். விரைவில் வெளியாகியுள்ள 'டீன்ஸ்' திரைப்படத்தை தமிழகம் எங்கும் உள்ள திரையரங்குகளில் (கோயம்புத்தூர் தவிர) சக்திவேலனின் சக்தி பிலிம் பேக்டரி வெளியிடுகிறது, கோயம்புத்தூர் வெளியீட்டு உரிமையை எல்மா பிக்சர்ஸ் என். எத்தில்ராஜ் பெற்றுள்ளார். இத்திரைப்படத்திற்காக இசை அமைப்பாளர் டி. இமான் மற்றும் ஒளிப்பதிவாளர் காவ்மிக் ஆரி ஆகியோருடன் முதல் முறையாக இராதாகிருஷ்ணன் பார்த்திபன் இணைந்துள்ளார். ஆர். சுதர்சன் படத்தொகுப்பை கையாண்டுள்ளார். 'டீன்ஸ்' இசை வெளியீட்டு விழாவின் முக்கிய அம்சங்கள் வருமாறு...

விழாவில் பாராட்டு பெற்ற 13 இளம் சாதனையாளர்களின் சார்பாக இசைக் கலைஞர் லிடியன் நாதஸ்வரம் பேசியதாவது...

"எங்களை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து கௌரவித்த பார்த்திபன் அவர்களுக்கு மிக்க நன்றி. 'டீன்ஸ்' திரைப்படம் பற்றி கூற வேண்டும் என்றால் இது பார்த்திபனின் கனவு. அவரும் இசையமைப்பாளர் டி இமான் அவர்களும் முதல் முறையாக இணைந்துள்ளார்கள் பாடல்களை கேட்டேன், மிகவும் அருமையாக உள்ளன. உங்கள் அனைவரைப் போன்று நானும் இத்திரைப்படத்தை திரையரங்குகளில் காண ஆவலாக உள்ளேன்." நடிகை பூர்ணிமா பாக்யராஜ் பேசியதாவது...

"அனைத்தையும் புதுமையாக செய்பவர் பார்த்திபன். 'டீன்ஸ்' திரைப்படத்தையும் அவ்வாறே உருவாக்கியுள்ளார் எத்தனையோ புதிய திறமைகளை அவர் இப்படத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார். இதன் டிரெய்லர் மற்றும் பாடல்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. பார்த்திபனுக்கும் அவரது குழுவினருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்."

'டீன்ஸ்' தயாரிப்பாளர்களில் ஒருவரான டாக்டர் பின்ச்சி ஸ்ரீநிவாசன் பேசியதாவது...

"நான் ஒரு குழந்தைகள் மருத்துவர். குழந்தைகளை மையப்படுத்திய 'டீன்ஸ்' திரைப்படத்தின் கதையை பார்த்திபன் எங்களிடம் சொல்லும் போதே நான்கு தயாரிப்பாளர்களுக்கும் மிகவும் பிடித்திருந்தது. சொல்லப்போனால் பார்த்திபனே ஒரு டீன் ஏஜர் தான். இத்திரைப்படத்தில் 13 டீன் ஏஜர்கள் உடன் பணியாற்றியதால் அவர் இன்னும் இளமையாக, அவர்கள் அனைவரின் உற்சாகத்தையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறார். இசையமைப்பாளர் இமான் மிக அருமையான பாடல்களை இத்திரைப்படத்திற்கு தந்துள்ளார். சிறுவர்கள் மட்டுமில்லாது அனைத்து தரப்பினரும் பார்த்து ரசிக்கக்கூடிய இத்திரைப்படம் அனைவரின் ஆதரவையும் பெற்று வெற்றி பெறும் என்று நம்புகிறேன்."

கவிஞர் மதன் கார்கி பேசியதாவது...

"தமிழ் சினிமாவுக்கு ஒரு புதுமையான படைப்பாக 'டீன்ஸ்' இருக்கும். பார்த்திபன் சார் இந்த கதையை என்னிடம் விவரிக்கும் போதே அவ்வளவு புதுமையாக இருந்தது. அதை திரையில் பார்க்க ஆவலாக உள்ளேன். ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு விதமாக இமான் இசையமைத்துள்ளார். ஒரு புது இசையமைப்பாளரின் படைப்புகள் போல பாடல்கள் அவ்வளவு பிரஷ்ஷாக உள்ளன. படத்தில் பணியாற்றிய இளம் கலைஞர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துகள்."

இயக்குநர் கே எஸ் ரவிக்குமார் பேசியதாவது...

"புதுமை என்றாலே பார்த்திபன் தான். குழந்தைகளை வைத்து படம் எடுப்பது என்பது அத்தனை சுலபமான விஷயம் இல்லை. ஆனால் பார்த்திபன் அதை சாதித்து காட்டியுள்ளார். கடின உழைப்பாளியும் இறைபக்தி அதிகம் கொண்டவருமான இமான் இனிமையான பாடல்களை இப்படத்திற்கு வழங்கி உள்ளார். படத்தை பார்த்துவிட்டு இதில் பங்காற்றிய ஒவ்வொருவரையும் தனித்தனியாக வாழ்த்த காத்திருக்கிறேன், நன்றி."

இளம் நடிகர் விக்ரம் பேசியதாவது...



"சினிமா ஒரு ஆசிரியர் என்றால் அதன் பேரன்பை பெற்ற மாணவர்களில் முதன்மையானவர் பார்த்திபன் சார். 'டீன்ஸ்' திரைப்படத்திற்கு உங்கள் அனைவரின் ஆதரவையும் தந்து மாபெரும் வெற்றி அடைய வைக்க வேண்டுகிறேன், நன்றி."

நடிகை அக்ஷயா உதயகுமார் பேசியதாவது...

"தனது ஒவ்வொரு படத்தின் போதும் அவரது அடுத்த படம் என்னவாக இருக்கும் என்று அனைவரையும் யோசிக்க வைப்பவர் பார்த்திபன் சார். . 'டீன்ஸ்' திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் பாடல்கள் மிகவும் அருமையாக உள்ளன. இப்படம் கட்டாயம் வெற்றி அடையும் என்று நம்புகிறேன்." நடிகர் புகழ் பேசியதாவது...

"குழந்தைகளை வைத்து படம் எடுப்பது என்பது சவாலான விஷயம். பார்த்திபன் சார் அதை சாதித்து காட்டியுள்ளார். இப்படத்தின் டிரெய்லரை பார்த்த உடனே திரைப்படத்தை முழுமையாக பார்க்க வேண்டும் என்ற ஆசை வருகிறது. 'டீன்ஸ்' திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தில் ஒரு குழந்தையாக நான் நடிக்க ஆசைப்படுகிறேன், நன்றி."

நடிகை வனிதா விஜயகுமார் பேசியதாவது...

"என்னுடைய மகள் பார்த்திபன் சாரிடம் அசிஸ்டெண்டாக பணிபுரிகிறார் என்பது மிகவும் பெருமையான விஷயம். டிரெய்லரை பார்த்த உடனேயே இது கட்டாயமாக திரையரங்குகளில் பார்த்து ரசிக்க வேண்டிய திரைப்படம் என்பது புரிகிறது. இதில் நடித்துள்ள குழந்தைகள் உள்ளிட்ட அனைத்து கலைஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்." இயக்குநர் கௌரவ் நாராயணன் பேசியதாவது...

"பார்த்திபன் சார் என்னுடைய மானசீக குருவாக ஏற்றுக் கொண்டுள்ளேன். சாதனை மேல் சாதனைகளாக படைத்து இளம் இயக்குநர்களுக்கு உற்சாகமாகவும் போட்டியாகவும் திகழ்கிறார். 'அஞ்சலி'க்கு பிறகு இத்தனை சிறுவர்கள் நடித்துள்ளது 'டீன்ஸ்' திரைப்படத்தில் தான் என்று நினைக்கிறேன். டிரெய்லர் மிகவும் ரசிக்கத்தக்க வகையில் உள்ளது இப்படத்தை காண ஆவலுடன் காத்திருக்கிறேன் படக்குழுவினர் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்." சக்தி பிலிம் பேக்டரி சக்திவேலன் பேசியதாவது...

"பார்த்திபன் சார் எனக்கு மிகவும் பிடித்த நடிகர் மற்றும் இயக்குநர். நான் ஒரு டீனேஜராக இருந்தபோது அவரது 'புதிய பாதை' திரைப்படத்தை பார்த்து ரசித்தேன். இப்போது அவரது 'டீன்ஸ்' திரைப்படத்தை நான் வெளியிடுகிறேன். இந்த திரைப்படத்தில் நடித்த டீனேஜர்களுக்கு 40 வயதாகும் போது அன்றைய டீனேஜர்கள் குறித்தும் பார்த்திபன் ஒரு படம் இயக்குவார் என்பது நிச்சயம். அந்த அளவுக்கு தன்னை அவர் இளமையாகவே வைத்துக் கொண்டுள்ளார். ஒரு திரைப்படத்தின் விநியோக உரிமையை வாங்கும்போது அதை எவ்வாறு புரொமோஷன் செய்ய வேண்டும் என்று நான் யோசித்து திட்டமிடுவது வாடிக்கை. ஆனால் பார்த்திபன் சார் திரைப்படத்திற்கு அவ்வாறு எதுவும் செய்ய தேவை இல்லை. எங்களை விட சிறப்பாக அவரே அனைத்து விதமான புரொமோஷன்களையும் செய்து கொண்டிருக்கிறார். இப்படம் கண்டிப்பாக வெற்றி அடையும்."

நடிகர் விதார்த் பேசியதாவது...

"இப்படத்தின் டிரெய்லரும் பாடல்களும் அவ்வளவு அருமையாக உள்ளன. படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். நிறைய பேசுகிறேன் நன்றி வணக்கம். 'டீன்ஸ்' திரைப்படத்தின் வெற்றி விழாவில் நிறைய பேசுகிறேன்." இயக்குநர் பேரரசு பேசியதாவது...

"இத்திரைப்படத்தில் அனைத்துமே நிறைவாக அமைந்துள்ளன. 'டீன்ஸ்' திரைப்படம் மாபெரும் வெற்றி அடைய வாழ்த்துகள். பார்த்திபன் சாரின் 'புதிய பாதை'யே இன்னும் பழைய பாதையாகவில்லை, 33 வருடங்களுக்கு பின்னாலும் இன்னும் புதுமையாகவே உள்ளது ஆனால் அவர் மேலும் பல புதிய பாதைகளை போட்டுக்கொண்டே செல்கிறார்." இயக்குநர் சரண் பேசியதாவது...

"பார்த்திபன் சார் எப்போதும் உணர்ச்சி வசப்பட மாட்டார். உணர்ச்சி தான் அவர் வசப்படும். 'டீன்ஸ்' படத்தின் மூலம் ஒரு ஹாலிவுட் திரைப்படத்தையே தமிழுக்கு அவர் வழங்கியுள்ளார். அவருக்கும் அவரது குழுவினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்."

நடிகர் ரோபோ சங்கர் பேசியதாவது...

"புதுமைகளின் பிறப்பிடம் பார்த்திபன் சார். அவர் என்ன செய்தாலும் வித்தியாசமாக இருக்கும். அதிலும் 'டீன்ஸ்' திரைப்படம் மிகவும் புதிதாக உள்ளது. குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துகள்."

நடிகர் யோகி பாபு பேசியதாவது...

"பார்த்திபன் சார் உடன் பணியாற்ற வேண்டும் என்று நீண்ட நாட்களாக அவரிடம் கேட்டு வந்தேன். இறுதியாக 'டீன்ஸ்' படத்தில் அந்த ஆசை நிறைவேறி உள்ளது. அவருடன் இன்னும் நிறைய திரைப்படங்களில் பணியாற்ற ஆவலாக உள்ளேன், நன்றி."

இயக்குனர் நடிகர் கே பாக்யராஜ் பேசியதாவது...

"நாளைய சூப்பர் ஸ்டார்களாக வளரப்போகும் 'டீன்ஸ்' படத்தில் நடித்துள்ள 13 இளம் கலைஞர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் வாழ்த்துகள். என்னுடன் உதவி இயக்குநராக பணிபுரிந்த பார்த்திபன் இவ்வளவு பெரிய உயரத்தை தொட்டு இருப்பது மிகவும் பெருமை. எப்போதுமே வித்தியாசமாகவும் புதுமையாகவும் சிந்திப்பவர் பார்த்திபன். அவரது இந்த 'டீன்ஸ்' திரைப்படம் மாபெரும் வெற்றி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன், நன்றி."

நடிகர் தம்பி ராமையா பேசியதாவது...

"'டீன்ஸ்' திரைப்படத்தை காண்பதற்கு நான் மிகவும் ஆவலாக காத்திருக்கிறேன். நடிகர், இயக்குநர் என்பதையும் தாண்டி பார்த்திபன் சார் ஒரு மிகச்சிறந்த கவிஞர். இந்த படத்தில் ஏழு பாடல்களையும் அவரே எழுதியுள்ளார். எதை செய்தாலும் புதுமையாக செய்யும் பார்த்திபன் சார் பதிமூன்று முத்துக்களை இப்படத்திற்காக தேர்ந்தெடுத்து நடிக்க வைத்துள்ளார். அவர்கள் அனைவரும் நாளைய திரை வானில் சிறகடித்து பறக்க போவது உறுதி. இமானின் பாடல்கள் மிகவும் அருமையாக உள்ளன, கடின உழைப்புக்கு சொந்தக்காரரர் அவர். இத்திரைப்படம் மிகப்பெரிய வெற்றியடைய வாழ்த்துகிறேன்."

இசையமைப்பாளர் டி. இமான் பேசியதாவது...

"இப்படி ஒரு இசை வெளியீட்டு விழாவை இதுவரை நான் பார்த்ததில்லை. அதற்காக பார்த்திபன் சாருக்கு நன்றி. இப்படத்தில் புதுமையான விஷயங்களை நிறைய முயற்சித்துள்ளோம். முதலில் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் போதும் என்று இருந்த நிலையில் தற்போது அது ஏழு பாடல்களாக வளர்ந்துள்ளது. பார்த்திபன் சாரும் நானும் எப்போதோ இணைந்து பணியாற்றி இருக்க வேண்டியது, அது இப்போதுதான் கைகூடி உள்ளது. அவருடன் பணியாற்றியது மிகச்சிறந்த அனுபவம், நன்றி."

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சதுரங்க விளையாட்டு பின்னணியில் சமூகப் பிரச்சனையை பேச வரும் ‘நாற்கரப்போர்’



சென்னை, 09 ஏப்ரல் 2024: வி 6 பிலிம் பிரைவேட் லிமிடெட் சார்பில் எஸ்.வேலாயுதம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் ‘நாற்கரப்போர்’. இயக்குநர் ஸ்ரீவெற்றி இப்படத்தை இயக்குகிறார். ஹெச்.வினோத், ராஜபாண்டி உள்ளிட்ட இயக்குநர்களிடம் இவர் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.

இறுகப்பற்று படம் மூலம் கவனம் பெற்ற நடிகை அபர்ணதி கதாநாயகியாக நடிக்க, படத்தின் மைய கதாபாத்திரமாக சேத்துமான் படத்தில் நடித்த அஸ்வின் நடிக்கிறார். முக்கிய வேடத்தில் கபாலி, பரியேறும் பெருமாள் புகழ் லிங்கேஷ், வில்லனாக சுரேஷ் மேனன் ஆகியோர் நடிக்கின்றனர்.

பிரபல மலையாள இயக்குநர் மேஜர் ரவியின் மகன் அர்ஜுன் ரவி, மற்றும் ஞானசேகரன் ஆகியோர் இப்படத்தின் மூலம் தமிழில் ஒளிப்பதிவாளராக அறிமுகமாகிறார்கள். சந்தோஷ் நாராயணனிடம் பல படங்களில் இணைந்து பணியாற்றிய தினேஷ் ஆண்டனி இந்த படத்திற்கு இசையமைக்கிறார். ரஞ்சித் சிகே என்பவர் படத்தொகுப்பை மேற்கொள்கிறார். கலை ஸ்ரீமன்ராகவன். பாடல்கள் குகை மா புகழேந்தி. தற்போது இப்படத்தின் டைட்டில் லுக், பர்ஸ்ட் லுக வெளியாகி உள்ளது.

‘நாற்கரப்போர்’ குறித்து இயக்குநர் ஸ்ரீவெற்றி கூறும்போது, “சதுரங்க விளையாட்டை மையப்படுத்தி இந்த படம் உருவாகி உள்ளது. ஏழை-பணக்காரன், உயர் ஜாதி-தாழ்ந்த ஜாதி, அரசியல்வாதி-மக்கள் என இவர்களுக்கு இடையே காலங்காலமாக இருக்கும் பிரச்சினைகளையும், அனைத்தும் அனைத்து மக்களுக்கும் சம அளவில் கிடைக்கும்படியான தொலைநோக்கு பார்வை இல்லாத வரை இங்கு இவர்களுக்குள்ளான போர் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும் என்ற அரசியலை பேசுகிறது. அதிகாரம் என்பது செயல்பாடுகளை நெறிமுறைப்படுத்துவதற்க்கே அன்றி தனிமனித தாக்குதலாக மாறக்கூடாது என்பதையும் சதுரங்க விளையாட்டின் பின்னணியில் இந்த படம் பேசுகிறது. தூய்மைப்பணி செய்யும் சமுதாயத்தில் இருந்து வந்த ஒருவன் எப்படி ‘கிராண்ட் மாஸ்டர்’ ஆகிறான்? அதற்காக அவன் சந்திக்கும் அரசியல் ரீதியான, ஜாதி ரீதியான, பிரச்சனைகள் என்ன என்பதை சொல்லும் அழகான ஒரு ஸ்போர்ட்ஸ் டிராமாவாக இந்த ‘நாற்கரப்போர்’ உருவாகி உள்ளது” என்கிறார்.

சென்னை மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் இதன் படப்பிடிப்பு கிட்டத்தட்ட 40 நாட்கள் நடைபெற்றுள்ளது. அந்த பகுதியைச் சேர்ந்த கிராமத்து மனிதர்கள் பலரையும் இந்த படத்தில் நடிக்க வைத்துள்ளார்கள்.

பட ரிலீஸுக்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில் விரைவில் இதன் ட்ரெய்லர் வெளியீட்டு விழா குறித்த அறிவிப்பு வெளியாக உள்ளது.

தொழில் நுட்பக் கலைஞர்கள் விவரம் ஒளிப்பதிவு ; அர்ஜுன் ரவி, ஞானசேகரன் இசை ; தினேஷ் ஆண்டனி படத்தொகுப்பு ; ரஞ்சித் சி கே கலை ; ஸ்ரீமன் ராகவன் ஆக்சன் ; பிரபு பாடல்கள் ; குகை மா.புகழேந்தி எக்ஸிகியூட்டிவ் புரடக்□ஷன் : அருண்மொழித்தேவன் மக்கள் தொடர்பு ; ஏ ஜான்

# ஒரு தவறு செய்தால் படம் மிக அருமையான, நேர்த்தியான படைப்பு




சென்னை, 09 ஏப்ரல் 2024: கே எம் பி பிக்சர்ஸ் மகேஷ் பாண்டியன் வழங்கி மணி தாமோதரன் இயக்கத்தில் உருவான திரைப்படம் ஒரு தவறு செய்தால்.

எம் எஸ் பாஸ்கர், நமோ நாராயணன், அறம் ராம், உபாசனா ஆர் சி, பாரி, ஸ்ரீதர், சுரேந்தர், சந்தோஷ் நடிப்பில் ரயன் இசையில் ஒரு அற்புதமான திரைப்படம்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் பொதுமக்கள் தங்களின் வாக்குகளை எந்த மாதிரியான அரசியல் வேட்பாளர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதை சிந்திக்க வைக்க கூடிய சரியான நேரத்தில் வெளிவந்திருக்கும் திரைப்படம். ஒரு யதார்த்தமான திரைக்கதை, சுவாரசியமான மேக்கிங், உணர்வுகளை கடத்தும் காதல், அரசியல் சூழ்ச்சிகளை அப்பட்டமாக வெளிப்படுத்தும் வசனங்கள்.

ஒரு அருமையான திரைப்படம். புதிய தயாரிப்பாளர், புதிய இயக்குனர், புதிய கதாபாத்திரங்கள், புதிய நண்பர்கள் பட்டாளம் இப்படி புதியவர்கள் ஒன்றிணைந்து படைத்திருக்கும் அருமையான படைப்பு. ஒரு தவறு செய்தால் திரைப்படத்தின் இயக்குனருக்கும், திரைப்பட குழுவினருக்கு எனது பாராட்டுக்கள்.

ஒரு தவறு செய்தால் திரைப்படம் பார்க்காத நண்பர்கள் கண்டிப்பாக திரையரங்குக்கு சென்று ஒரு தவறு செய்தால் திரைப்படத்தை பாருங்கள், மிக அருமையான, நேர்த்தியான படைப்பு.

‘எங்க வீட்டுப் பிள்ளை’ எனும் படத்தில், 1965 இல் கவிஞர் வாலியால் எழுதப்பட்ட ‘நான் ஆணையிட்டால்’ பாடலில் வரும் ஒரு வரியைப் படத்திற்குத் தலைப்பாக வைத்துள்ளார் இயக்குநர் மணி தமோதரன். பாடலில் அடுத்த வரியான, ‘அதைத் தெரிந்து செய்தால்’ என்ற வரியையும் சேர்த்தே, கதையின் ஓட்டத்தை உருவாக்கியுள்ளார்.

திரைத்துறையில் உள்ள நண்பர்கள் மூவர்க்கு, தங்கியிருக்கும் அறையைக் காலி செய்யவேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. பிறரின் தேவையைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், சுலபமாகச் சம்பாதிக்கலாமென பாடத்தைக் கோயம்பேடு மார்க்கெட்டில் கற்கின்றனர். தொழில்நுட்பம் தெரிந்த இளம்பெண் ஒருவரது துணையுடன், கே.கே.நகரில் நடக்கும் தேர்தலைப் பயன்படுத்திப் பெரும்பணம் பார்க்க நினைக்கிறார்கள்.

ஓர் அழகான ஃப்ளாஷ்-பேக் காட்சியில், தன் பள்ளிக்காதலை நினைவுகூருகிறான் நாயகன். அந்த மான்டேஜஸ்க்கு, டி.ஆர். குரலில் ஒரு நெடுங்கவிதை ஒலிக்கப்படுகிறது. படத்தை விட்டு சின்னதொரு விலகலாக இருந்தாலும், ரசிக்கும்படியேயாகவே இருக்கிறது. அதே போல், படத்தின் முடிவில் தனித்து வரும் ஒரு ஏழைக் குடும்பத்தலைவனின் மனத்திண்மையை வலியுறுத்தும் காட்சி படத்தின் டோனையே மாற்றிவிடுகிறது. டீப் ஃபேக் தொழில்நுட்பத்தின் சாத்தியத்தையும், அதனால் ஏற்படும் அபாயத்தையும், படம் தொட்டுச் செல்கிறது. மேலும், வைரல் என்ற பெயரில் பரப்பப்படும் செய்தியின் பின்னுள்ள உண்மைத்தன்மையைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் உணர்ச்சிவசப்படும் மக்களின் மனநிலையையும் உரண்டைக்கு இழுத்துள்ளார் இயக்குநர்.

பாரி, ஸ்ரீதர், சுரேந்தர், சந்தோஷ் என நான்கு நண்பர்களும் நிறைவான பங்களிப்பை அளித்துள்ளனர். முதலில், சுலபமாகப் பணம் சம்பாதிக்கும் திட்டத்தை மறுத்து, பின் போலீஸாரின் அராஜகத்தைக் கண்டு ஒத்துக் கொண்டு, மீண்டும் மனம் தடுமாறுவதென, மிக முக்கியமான பாத்திரம் ஏற்றுள்ளார் உபாசனா. வேட்பாளராக நமோ நாராயணாவும், அவரது ஆலோசகராக எம்.எஸ்.பாஸ்கரும் நடித்துள்ளனர். அரசியல்வாதியின் குயுக்தியையும், அதனின்று உருவாகும் வியூகத்தையும், தங்கள் நடிப்பின் மூலமாக அற்புதமாகப் பிரதிபலித்துள்ளனர். லாஜிக்கில்லா ஹீஸ்ட் என்றாலும், க்ளைமேக்ஸில் டிவிஎஸ்-50 இல் சென்று பணத்தைக் கவரும் காட்சிகள் கலகலப்பாக வந்துள்ளது.

மணி தமோதரனின் எழுத்து, குறிப்பாக வசனங்கள், படத்தின் சுவாரசியத்திற்கு உத்திரவாதமளிக்கிறது. ஒளிப்பதிவில் சற்றே கவனம் செலுத்தியிருந்தால், படம் இன்னுமுமே ரசிக்கும்படி அமைந்திருக்கும். தேர்தல் சமயத்தில், ‘ஓட்டு போடப் பணம் வாங்குவது சரியா?’ என்ற முக்கியமான கேள்வியையும் எழுப்பியுள்ளனர்.

# விவசாயிகளின் வாழ்வியலைச் சொல்ல வரும் ‘பரமன்’ சூப்பர்குட் சுப்பிரமணி கதையின் நாயகனாக நடிக்கும் ‘பரமன்’



சென்னை, 09 ஏப்ரல் 2024: இன்ஃபினிட் பிக்சர்ஸ் சார்பில் ஜெ சபரிஸ் தயாரித்து இயக்கியுள்ள படம் ‘பரமன்’ விவசாயிகளின் வாழ்வியலை மையப்படுத்தி உருவாகியுள்ள இப்படத்தில் 'ஜெய்பீம்', 'பரியேறும் பெருமாள்' உள்ளிட்ட பல படங்களில் குணச்சித்திர நடிகராக நடித்துள்ள சூப்பர் குட் சுப்பிரமணி கதையின் நாயகன் ‘பரமன்’ ஆக நடித்திருக்கிறார்.

பழ கருப்பையா வில்லனாக நடிக்க, இதுவரை பார்த்திராத ஒரு சீரியஸான கதாபாத்திரத்தில் வையாபுரி நடித்துள்ளார். மேலும் ஹலோ கந்தசாமி, விஜே அர்ச்சனா, மீசை ராஜேந்திரன், அசோக் தமிழ், சத்யா, ஜெயச்சந்திரன், கார்த்திக் பிரபு, சஞ்சய், மது உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

தமீம் அன்சாரி இசையமைத்திருக்கும் இப்படத்திற்கு சிபி சதாசிவம் ஒளிப்பதிவு செய்ய, படத்தொகுப்பை இயக்குநர் சபரிஸே மேற்கொண்டுள்ளார். படத்தின் கதையை இதய நிலவன் எழுதியுள்ளார். பாடல்களை வேல்முருகன், முகேஷ் ஆகியோர் பாடியுள்ளனர்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது. இதனை தமிழ் சினிமாவின் ஜாம்பவான் இயக்குநர்களான பாரதிராஜா, பாக்யராஜ், எஸ்.ஏ சந்திரசேகர், பி வாசு உள்ளிட்ட பலரும் இணைந்து வெளியிட்டு உள்ளனர். மறைந்த நடிகை விஜே சித்ரா நடிப்பில் இயக்குநர் சபரிஸ் இயக்கத்தில் அவரது முதல் படமான ‘கால்ஸ்’ கடந்த கோவிட் காலகட்டத்தில் திரையரங்குகளில் வெளியானது. அதே சமயம் இப்போது வரை கலர்ஸ் தமிழ் தொலைக்காட்சியில் 35 முறைக்கும் மேலாக இந்த படம் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு டிஆர்பி ரேட்டிங்கில் மிகப்பெரிய சாதனையை செய்துள்ளது. அது மட்டுமல்ல அமேசான் பிரைமில் இதுவரை பல கோடி பேருக்கு மேல் இந்த படத்தை பார்த்து ரசித்துள்ளனர்.

தனது முதல் படத்தில் கால் சென்டரில் நடக்கும் நிகழ்வுகளை வைத்து படமாக்கிய இயக்குநர் சபரிஸ், அதற்கு முற்றிலும் மாறாக இந்த ‘பரமன்’ படத்தில் விவசாயிகளின் வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகளைக் கையில் எடுத்துள்ளார். தேனி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இந்த படத்தின் படப்பிடிப்பு கிட்டத்தட்ட 35 நாட்களுக்கு மேல் நடைபெற்றுள்ளது.

‘பரமன்’ பர்ஸ்ட் லுக்கை வெளியிட்டுள்ள இயக்குநர்கள் பலரும், குறிப்பாக இயக்குநர் சீமான் இப்படத்தின் டிரைலரையும் பார்த்துவிட்டு, இப்படம் சமூகத்திற்கு தேவையான ஒரு முக்கிய கருத்தை சொல்ல வருகிறது எனக் கூறி தங்களது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து விரைவில் இப்படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழா தேதி அறிவிக்கப்பட இருக்கிறது.

நடிகர்கள்

சூப்பர்குட் சுப்பிரமணி, பழ. கருப்பையா, வையாபுரி, ஹலோ கந்தசாமி, விஜே அர்ச்சனா, மீசை ராஜேந்திரன், அசோக் தமிழ், சத்யா, ஜெயச்சந்திரன், கார்த்திக் பிரபு, சஞ்சய், மது மற்றும் பலர் தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம் தயாரிப்பு ; இன்ஃபினிட் பிக்சர்ஸ் இயக்கம் ; ஜெ சபரிஸ் கதை ; இதயநிலவன் இசை ; தமீம் அன்சாரி ஒளிப்பதிவு ; சிபி சதாசிவம் படத்தொகுப்பு ; ஜெ சபரிஸ் பாடகர்கள் ; வேல்முருகன், முகேஷ் மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்.

# அமெரிக்காவில் ஒரு மாதத்திற்கு முன்பு காணாமல் போன இந்திய மாணவர் சடலமாக மீட்பு




சென்னை, 09 ஏப்ரல் 2024: ஐதராபாத்தைச் சேர்ந்த முகமது அப்துல் அர்பத் என்பவர் அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த ஒரு மாதமாக முகமது அப்துல் அர்பத் காணாமல் போன நிலையில் அவர் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

25 வயதான அர்பத்தின் உடல் ஓஹியோவின் கிளீவ்லேண்டில் மீட்கப்பட்டுள்ளது. நியூயார்க்கில் உள்ள இந்திய தூதரகமும் அவரது மரணத்தை உறுதி செய்துள்ளது.

நியூயார்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகம் எக்ஸ் பக்கத்தில், “முகமது அப்துல் அர்பத், ஓஹியோவில் உள்ள கிளீவ்லேண்டில் இறந்து கிடந்தார் என்பதை அறிந்து வேதனை அடைகிறோம். மரணம் குறித்து முழுமையான விசாரணையை உறுதி செய்வதற்காக அமெரிக்க போலீசுடன் தொடர்பில் இருந்து வருகிறோம். அர்பத்தின் அஸ்தியை இந்தியாவுக்குக் கொண்டு செல்ல, அவரது குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வோம்” என்று பதிவிட்டுள்ளது.

கிளீவ்லேண்ட் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலைப் பட்டம் பயின்று வந்தவர் அர்பத். மேல் படிப்புக்காக கடந்த மே 2023ல் தான் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். இதனிடையே தான் கடந்த மார்ச் 7ம் தேதி காணாமல் போனார் அர்பத்.

பின்னர் மார்ச் 19 அன்று அர்பத்தின் குடும்பத்தை தொடர்பு கொண்ட மர்ம நபர்கள் சிலர், “அர்பத் கடத்தப்பட்டு இருப்பதாகவும், அவரை விடுவிக்க வேண்டும் என்றால், 1,200 டாலர் வேண்டும் என்றும், கேட்டத் தொகையை கொடுக்காவிட்டால் அர்பத்தின் சிறுநீரகத்தை விற்றுவிடுவோம்” என்றும் அந்தக் கும்பல் மிரட்டியதாக அர்பத்தின் தந்தை தெரிவித்திருந்தார். ஒரு வாரத்துக்குள் அமெரிக்காவில் உயிரிழக்கும் 2வது இந்தியர் அர்பத். கடந்த வாரம், ஓஹியோவில் உமா சத்ய சாய் காடே என்ற இந்திய மாணவி உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார். அதேநேரம் 2024ம் ஆண்டு தொடங்கியதில் இருந்து இதுவரை 11 இந்தியர்கள் இறந்த நிலையில் அமெரிக்காவில் கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இந்தியா ஸ்கூல் ஃபைனான்ஸ் கம்பெனியின் (ஐஎஸ்எஃப்சி) ஸ்கூல் போர்ட்ஃபோலியோவை வர்தனா வெற்றிகரமாகப் பெற்றுள்ளார்

சென்னை, 09 ஏப்ரல் 2024: இந்தியாவின் கல்வி நிதித் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில், தனியார் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு உயர்கல்வியைத் தொடரக் கடனுதவி வழங்கும் முன்னணி வங்கி சாரா நிதி நிறுவனமான (என் பி எஃப் சி ) வர்தன ஃபைனான்ஸ் இன்று வெற்றிகரமாக முடிவடைந்ததாக அறிவித்தது. இந்தியன் ஸ்கூல் ஃபைனான்ஸ் கம்பெனியின் (ஐஎஸ்எஃப்சி) ஸ்கூல் போர்ட்ஃபோலியோவை கையகப்படுத்தியது.

இந்த கையகப்படுத்தல் இந்தியாவின் 4,00,000 தனியார் பள்ளிகளுக்கு சேவை செய்வதில் சிறந்த வீரர்களின் அர்ப்பணிப்பை ஒருங்கிணைக்கிறது, அதே நேரத்தில் கல்வி நிறுவனங்களின் பரந்த வலையமைப்பிற்கு அவர்களின் வரம்பையும் தாக்கத்தையும் மூலோபாய ரீதியாக விரிவுபடுத்துகிறது. ஐஎஸ்எஃப்சி இன் துவக்கம் மற்றும் ஆரம்ப ஆண்டுகளில் வர்தனாவின் நிறுவனர்களின் ஈடுபாடு வழக்கமான வணிக பரிவர்த்தனையை மீறி, ஒத்துழைப்புக்கு குறிப்பிடத்தக்க ஆழத்தை சேர்க்கிறது. இந்தியாவில் மலிவு விலையில் கல்வி மேம்பாட்டை மேம்படுத்தும் ஐஎஸ்எஃப்சியின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வர்த்தனா தயாராகி வருவதால், இந்த விற்பனையானது பணிப்பெண்ணின் இதயப்பூர்வமான பரிமாற்றத்தைக் குறிக்கிறது.

வர்த்தனாவின் தலைமை நிர்வாக அதிகாரியும் இணை நிறுவனருமான ஸ்டீவ் ஹார்ட்கிரேவ் இந்த கையகப்படுத்தல் குறித்து கருத்து தெரிவிக்கையில், “இந்தியாவின் பள்ளிகள் நாட்டின் 350 மில்லியன் இளைஞர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதை உறுதி செய்வதற்கான எங்கள் பயணத்தில் ஐ எஸ் எ ஃப் சி போர்ட்ஃபோலியோவை வர்த்தனாவின் பிரிவின் கீழ் எடுத்துக்கொள்வது மற்றொரு குறிப்பிடத்தக்க படியாகும். . ஐஎஸ்எஃப்சி உடனான எங்கள் உறவு முழு வட்டத்திற்கு வந்துள்ளது என்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது, மேலும் அந்த பாரம்பரியத்தை முன்னோக்கி கொண்டு செல்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். புதிய மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் யோசனைகளில் முதலீடு செய்வதில் பாப் எவ்வளவு தனித்துவமாக அர்ப்பணிப்புடன் இருக்கிறார் என்பதையும் நாங்கள் அறிவோம். இந்த வினையூக்க மூலதனத்தை மறுசுழற்சி செய்வதில் அடுத்த தலைமுறை முன்னோடி முயற்சிகளுக்கு உதவுவதில் ஒரு சிறிய பங்கை வகிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

விற்பனையைப் பற்றி பாப் பாட்டிலோ கூறுகிறார், “வரதனாவுடன் ஐஎஸ்எஃப்சியின் செழுமையான பாரம்பரியத்தை இணைப்பது, இந்தியாவில் கல்வி நிதித் துறையில் சாதிக்கக்கூடியதை பல மடங்கு அதிகரிக்கும், எதிர்கால சந்ததியினர் அவர்கள் தகுதியான கல்வியை அணுகுவதை உறுதி செய்யும். ஐஎஸ்எஃப்சி மூலம், 15 ஆண்டுகளில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 5 மில்லியன் குழந்தைகளுக்கு நாங்கள் ஆதரவளித்துள்ளோம் என்பது என்னைப் பெருமிதத்தில் ஆழ்த்துகிறது, இது ஒரு இயக்கத்தைத் தூண்டியது, இது முக்கிய வணிகக் கடன் வழங்குநர்களை இந்தப் பிரிவின் மதிப்பை அங்கீகரிக்க வழிவகுத்தது. எங்கள் அறக்கட்டளையின் நோக்கம் நிறைவேறியது, மேலும் ஐஎஸ்எஃப்சி ஆனது கோவிட்-ன் சோதனைகள் மூலம் வெற்றிகரமாக வழிநடத்தப்பட்டாலும், இந்தப் பள்ளிகளில் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களின் சிறந்த நலன்களுக்கு எது உதவும் என்பது பற்றிய எங்கள் கருத்தில் கொள்ளப்பட்ட தீர்ப்பை எங்கள் தேர்வு பிரதிபலிக்கிறது. இந்த விற்பனை ஒரு பரிவர்த்தனையை விட அதிகமாக குறிக்கிறது; சந்தைத் தேவை, உந்துதல் தனிநபர்கள் மற்றும் தெளிவான பார்வை ஆகியவற்றுடன் இணைந்தால் மூலதனம் எவ்வாறு மாற்றமடைகிறது என்பது மட்டுமல்லாமல், பணியை முன்னோக்கி கொண்டு செல்ல மிகவும் பொருத்தமான மற்றவர்களுக்கு ஜோதியை எப்போது அனுப்புவது என்பதும் இது ஒரு எடுத்துக்காட்டு.

ஐஎஸ்எஃப்சி சி ஈ ஓ சந்தீப் விர்காரே மேலும் கூறுகிறார், "இது ஒரு முன்மாதிரியான பரிவர்த்தனையாக இருக்கலாம், இதில் ஒரு தாக்க நிறுவனம் ஒரு தயாரிப்புப் பிரிவை உருவாக்க உதவுகிறது, நிலைப்படுத்துகிறது மற்றும் வாடிக்கையாளர் மற்றும் ஊழியர்களின் உறவைத் தொடர மிகவும் ஒத்த எண்ணம் கொண்ட நிறுவனத்திற்கு ஒரு வளர்ச்சிக் கட்டையை ஒப்படைக்கிறது."

இந்த விற்பனை வெறும் சொத்து பரிமாற்றம் அல்ல; இது பணிப்பெண்ணின் இதயப்பூர்வமான பரிமாற்றத்தை பிரதிபலிக்கிறது, இந்தியாவில் மலிவு விலையில் கல்வி மேம்பாட்டை மேம்படுத்தும் ஐஎஸ்எஃப்சியின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வர்த்தனா நல்ல நிலையில் இருக்கிறார். இரு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த பலம் மற்றும் பகிரப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவை நம்பிக்கைக்குரிய எதிர்காலத்திற்கான களத்தை அமைத்து, இறுதியில் நாட்டின் கல்வி நிலப்பரப்பை மேம்படுத்துவதற்கு பங்களிக்கின்றன.

# கிளியர்ட்ரிப்-ல் மகேந்திர சிங் தோனி பிராண்ட் தூதராக நியமனம்




சென்னை, 09 ஏப்ரல் 2024: பிளிப்கார்ட் நிறுவனமான கிளியர்ட்ரிப், கிரிக்கெட் ஜாம்பவான் மகேந்திர சிங் தோனியை தனது புதிய பிராண்ட் தூதராக இணைத்துக் கொண்டுள்ளது. மகேந்திர சிங் தோனியுடன் இணைந்து, பயணத்தில் சரியான தேர்வுகளை மேற்கொள்ள வாதிடும் கிளியர்ட்ரிப் நிறுவனத்திற்கு இந்த ஒத்துழைப்பு ஒரு வரலாற்று மைல்கல்லை குறிக்கிறது. "கிளியர் சாய்ஸ்" இதற்கு வழிவகுப்பதற்கும் , முடிவெடுப்பதை எளிதாக்குவதற்கும், தடையற்ற மற்றும் பதட்டமில்லாத பயண அனுபவங்களை உறுதி செய்வதற்கும் பயணிகளை ஊக்குவிப்பதை இந்த பிராண்ட் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மகேந்திர சிங் தோனி, கேப்டன் கூல் என்று அன்புடன் அழைக்கப்படுகிறார், வெளிப்படைத்தன்மை, நம்பிக்கை மற்றும் நேர்மை ஆகியவற்றின் மதிப்புகளை வெளிப்படுத்துகிறார், அவரை கிளியர்ட்ரிப்பின் நெறிமுறைகளின் சரியான உருவகமாக்குகிறார். இந்த சங்கத்தின் மூலம், கிளியர்ட்ரிப் மகேந்திர சிங் தோனியின் உலகளாவிய முறையீட்டைப் பயன்படுத்த முற்படுகிறது, இது தலைமுறைகள் மற்றும் புவியியல் ஆகியவற்றைக் கடந்து, பலதரப்பட்ட பயனர்களுக்கு நம்பகமான பயணக் கூட்டாளியாக அதன் நிலையை வலுப்படுத்துகிறது. இது கிளியர்ட்ரிப் இன் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப பயணத்தை அணுகக்கூடியதாக ஆக்குகிறது, அதன் வாடிக்கையாளர் தளத்தை தீவிரமாக விரிவுபடுத்துகிறது மற்றும் அதன் சந்தை இருப்பை இயக்குகிறது.

மகேந்திர சிங் தோனி, கிளியர்ட்ரிப் பிராண்ட் தூதுவர், “எனது தொழில் வாழ்க்கை முழுவதும், கண்டங்கள் முழுவதும் பயணம் செய்து, நான் ஒரு உண்மையான உலகப் பயணியாக இருந்தேன், மேலும் பயணத்தின் மீதான எனது அன்பைக் கண்டுபிடித்தேன். பல வருடங்களுக்குப் பிறகு, பயணம் நான் எதிர்நோக்கும் ஒன்றாக மாறிவிட்டது. பயணம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பிரதிபலிக்கும் ஒரு பிராண்டான கிளியர்ட்ரிப்-க்கு வருவதில் நான் மகிழ்ச்சியடைய முடியாது - வேடிக்கையானது, மறக்கமுடியாதது மற்றும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. எனது வாழ்க்கையில், நான் ஒவ்வொரு நாளும் கடினமான முடிவுகளை எடுப்பேன், ஆனால் கிளியர்ட்ரிப் மூலம், முடிவெடுப்பது எளிதானது மற்றும் நேரடியானது. வெளிப்படைத்தன்மைக்கான அவர்களின் அர்ப்பணிப்பு தேர்வுகளை எளிதாக்குகிறது மற்றும் யாரையும் நம்பிக்கையுடன் தங்கள் கனவுகளின் பயணத்தில் செல்ல அனுமதிக்கிறது.

ஒத்துழைப்பைப் பற்றி பேசிய கிளியர்ட்ரிப் இன் சி ஈ ஓ அய்யப்பன் ஆர்., “கிளியர்ட்ரிப் குடும்பத்திற்கு மகேந்திர சிங் தோனியை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவர் ஒரு மரியாதைக்குரிய விளையாட்டு வீரர் ஆவார், அவர் முழு தலைமுறையையும் ஊக்கப்படுத்தினார் - அவர் தனது மதிப்புகளுக்கு பெயர் பெற்றவர் மற்றும் பெரும்பாலும் நம்பிக்கை மற்றும் சிறந்த தலைமைத்துவ திறன்களை வளர்ப்பதில் தொடர்புடையவர். அவருடனான எங்கள் தொடர்பு மூலம், பயணத்தில், தடையின்றி சரியான தேர்வுகளை மேற்கொள்ள தனிநபர்களுக்கு அதிகாரம் அளிப்பதாக நாங்கள் நம்புகிறோம். நாங்கள் தொடர்ந்து வளர்ந்து வருவதால், அவர்கள் எங்கிருந்து வந்தாலும், அனைவருக்கும் பயணத்தை அடையக்கூடிய விருப்பமாக மாற்றுவோம் என்று நம்புகிறோம். மகேந்திர சிங் தோனி கப்பலில் இருப்பதால், ஒரு பெரிய மக்கள்தொகையை ஊக்குவிப்பதோடு, நம்பிக்கையுடன் உலகை ஆராய்வதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

மகேந்திர சிங் தோனி தனது முதல் இன்னிங்ஸை கிளியர்ட்ரிப் மூலம் ஒரு பொழுதுபோக்கு விளம்பரப் படத்துடன் குறிக்கிறார், அது விரைவில் நேரலைக்கு வரும். கிளியர்ட்ரிப் மற்றும் மகேந்திர சிங் டோனி இணைந்து, நாடு முழுவதும் உள்ள பயணிகளை கிளியர் சாய்ஸ் மீது நம்பிக்கை வைத்து, தெளிவு, நம்பிக்கை மற்றும் மறக்க முடியாத அனுபவங்கள் நிறைந்த பயணங்களைத் தொடங்க வேண்டும் என்று விரும்புகின்றனர். கிளியர்ட்ரிப் இல் வந்து, கேப்டனின் வழிகாட்டுதலைப் பின்பற்றி சரியான தேர்வு செய்யுங்கள்.

# ஃபேண்டசி ஜானரில் இன்னொரு காமெடி படம். டக்கரா இருக்கு டபுள் டக்கர்



சென்னை, 09 ஏப்ரல் 2024: அறிமுக இயக்குநர் மீரா மஹதி இயக்கத்தில் தீரஜ், ஸ்ம்ருதி வெங்கட், யாஷிகா ஆனந்த், கோவை சரளா, மன்சூர் அலி கான், ஷாரா, எம்.எஸ். பாஸ்கர், கருணாகரன், சுனில் ரெட்டி என ஏகப்பட்ட பேர் நடித்திருந்தாலும் டபுள் டக்கர் படத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் ஈர்ப்பது அந்த கடவுளின் காவலர்களான ரைட் மற்றும் லெஃப்ட் பொம்மைகள் தான். வி ணீ வீ பீ ணீ ணீ ஸீ ஸிமீஸ்வீமீஷ்: மைதான் விமர்சனம்.. தியேட்டர்கள் எல்லாம் ஸ்டேடியமா மாறுது.. பிகிலுக்கெல்லாம் பிகிலு! ராஜா சின்ன ரோஜா படத்தில் ரஜினிகாந்த் உடன் அனிமேஷன் பொம்மைகள் நடனமாடும் காட்சிகளை சிறு வயதில் கண்டு ரசித்திருப்போம். ரஜினிகாந்த் நடித்த அதிசய பிறவி படத்தில் எமதர்மன், சித்ரகுப்தா செய்யும் லூட்டி மற்றும் லக்கி மேன் படத்தில் இடம்பெறும் அதே போன்ற எமதர்மன், சித்ரகுப்தா கான்செப்ட்டில் பல படங்களை பார்த்து இருப்போம். இந்த டபுள் டக்கர் படத்தில் எமதர்மன், சித்ரகுப்தாவுக்கு பதிலாக ரைட், லெஃப்ட் என 2 பொம்மைகள் வருகின்றன. அந்த பொம்மைகளுக்கு முனிஷ்காந்த் மற்றும் காளி வெங்கட் டான் படத்தின் காம்போ போல வாய்ஸ் கொடுத்திருப்பது படத்துக்கு மிகப்பெரிய பலமாக மாறியுள்ளது. டபுள் டக்கர் படம் எங்கே எல்லாம் தூள் கிளப்பியது என்பது குறித்து விரிவான விமர்சனத்தை இங்கே பார்க்கலாம் வாங்க.

கார்ட்டூன் படங்களில் வருவது போன்ற அனிமேஷன் பொம்மைகள் மற்றும் அதற்கு குரல் கொடுத்திருக்கும் முனிஷ்காந்த் மற்றும் காளி வெங்கட் காம்போ செய்யும் ரகளை தான் படத்திற்கு பிளஸ். கபாலி ரஜினியாகவும், ஏஜென்ட் விக்ரம் கமலாகவும் ரோலக்ஸ் சூர்யாவாகவும், காந்தாரா தெய்வமாகவும் அந்த பொம்மைகள் உருவம் மாறி வந்து செய்யும் சேட்டைகள் சிரிக்க வைக்கின்றன. அந்த இரண்டு பொம்மைகளை தாண்டி எம்.எஸ். பாஸ்கர், கருணாகரன், ஷாரா, கோவை சரளா என பலரும் காமெடியில் கலக்கியுள்ளனர்.

சிறு வயதில் ஏற்படும் விபத்து காரணமாக அரவிந்த் (தீரஜ்) முகத்தில் தழும்பு ஏற்படுகிறது. அப்படியிருக்கும் நபரை பலரும் வெறுத்து ஒதுக்குகின்றனர். அவரை பாரு என்கிற கதாபாத்திரத்தில் நடித்துள்ள ஸ்ம்ருதி வெங்கட் காதலிக்க தொடங்கும் நேரத்தில் ரைட் மற்றும் லெஃப்ட் வந்து அரவிந்தின் உயிரை தவறுதலாக பறித்து விடுகின்றனர். மீண்டும் அந்த உடலில் உயிரை சேர்த்து விடலாம் என பார்த்தால், பாடி மிஸ்ஸிங். ஆவியாக இருக்கும் ஹீரோவுக்கு அவரை போலவே உருவ ஒற்றுமை கொண்ட ராஜா எனும் நபரின் உடல் தற்காலிகமாக கிடைக்கிறது. இந்த உடல் ஹேண்ட்ஸமாக இருந்தாலும், எனக்கு என் உடல் தான் வேணும் என அடம்பிடிக்கும் ஹீரோவுடன் சேர்ந்துக் கொண்டு அவரது உடலை தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் அந்த லெஃப்ட் ரைட் இறங்குகிறது. கடைசியில் என்ன ஆனது என்பது தான் படத்தின் கிளைமேக்ஸ்.

# கற்பு பூமியில் சில கருப்பு ஆடுகள் சினிமா விமர்சனம்

சென்னை, 09 ஏப்ரல் 2024: அரசியல்வாதியின் மகன் ஒருவன் பெண்களிய எல்லாம் கடத்தி மானபங்கப்படுத்தி, தொடர் சித்திரவதை செய்து வருகிறான். ஐ ஏ எஸ் பயிற்சி வகுப்பிலுள்ள மாணவனை, ஒரு பெண் காவல்துறை அதிகாரி கைது செய்கிறார். ப்ளேடு பக்கிரி எனும் ரௌடியின் பெயரில் அவனைக் கைது செய்து சிறையில் அடைக்கிறார். அந்த மாணவனை அவ்வதிகாரி ஏன் கைது செய்கிறார், அந்த மாணவன் எப்படித் தப்பிக்கிறான் என்பதும்; படுபாதக செயல்களில் ஈடுபட்டு வரும் அரசியல்வாதி மகனுக்கும், அப்பெண் காவலதிகாரிக்கும், மாணவனுக்கும் என்ன சம்பந்தம் என்பதுமே படத்தின் கதை.




சில ஆண்டுகளுக்கு முன்னால் பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளில் நடைபெற்ற அப்பாவி பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு படத்தை உருவாக்கியுள்ளார் இயக்குநர் நேசம் முரளி. பெண் குழந்தைகளை கவனமாக வளர்க்க வேண்டும் என்கிற அறிவுரையை மட்டும் வணங்காமல், ஐஏஎஸ் படிக்கும் சிவ நேசன் மூலம் ஆண் குழந்தைகளை இப்படி பொறுப்பாக வளர்க்க வேண்டும் என்கிற கருத்தையும் சேர்த்தே விதைத்திருக்கிறது இந்தப் படம்.

ஒரு ஐ ஏ எஸ் படிக்கும் கணவன் கதாபாத்திரத்தை வைத்து தவறு செய்தவர்களை இறுதியில் காவல் துறை தண்டிப்பதாக காட்சிப்படுத்திருப்பது பாராட்டத்தக்க திரைக்கதை. கற்பு பூமியில் சில கருப்பு ஆடுகள் என்கிற தலைப்பில் முழு படமாக பார்த்தபோது, வக்கிரமான காட்சிகள் எதுவுமே இல்லாமல் குடும்பத்தோடு பார்த்து ரசிக்கதற்காக வகையில் இந்த படத்தை எடுத்திருக்கிறார்.

காவல்துறை நீதித்துறை ஆகியவற்றை அரசியல் செல்வாக்கினால் எப்படி அதிகார வர்க்கத்தினர் தங்கள் இஷ்டத்திற்கு வளைக்கிறார்கள் என்பதையும் தவறு செய்தவளை காப்பாற்ற சமூகத்தின் பெயரில் பாதிக்கப்பட்டது தனது சமூகப் பெண்கள் என்றாலும் அவர்களிடம் சமரசம் செய்யும் விதமாக பேசும் கொடுமையையும் காட்டிய விதத்தில் இந்த படம் பாராட்டத்தக்க ஒன்று.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# 2024 - ம் ஆண்டில் புனேவில் உள்ள தனது உற்பத்தி தொழிலகத்தை விரிவுபடுத்த ரூ.240 கோடியை முதலீடு செய்யும் ஜிஇ ஏரோஸ்பேஸ்

சென்னை, 09 ஏப்ரல் 2024: நியூயார்க் பங்குச் சந்தையில் ஒரு தனி நிறுவனமாக பட்டியலிடப்பட்ட நிகழ்வைத் தொடர்ந்து, புனேவில் உள்ள அதன் உற்பத்தி தொழிலகத்தை விரிவாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் 240 கோடி ரூபாய் (~30 மில்லியன் யுஎஸ் டாலர்) முதலீடு செய்யப்படுவதை ஜிஇ ஏரோஸ்பேஸ் அறிவித்துள்ளது.

இயந்திரங்கள்/உபகரணங்கள் மற்றும் சிறப்பு கருவிகளைப் பெறுவதன் மூலம் புதிய செயல்திட்டங்கள் மற்றும் உற்பத்தி செயல்முறைகளை கூடுதலாக சேர்ப்பதற்கு இந்த முதலீடு வழிவகுக்கும்.

“புனே நகரில் அமைந்துள்ள பல்வேறு புராடக்ட்களை தயாரிக்கும் தொழிலகத்தில் செயலாற்றும் எமது குழுவினர் பாதுகாப்பு, தரம் ஆகியவற்றை உறுதிசெய்து, தயாரிப்புகளை எமது வாடிக்கையாளர்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவது மீது சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றனர். விமான இன்ஜின் பாகங்களின் எமது உலகளாவிய வழங்கல் சங்கிலித் தொடருக்கு வலுவான பங்களிப்பாளராக ஏற்கனவே ஆகியிருக்கும் இத்தொழிலகத்தில் விரிவாக்கப் பணிகள் நிகழ்வதை காண்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்,” என்று ஜிஇ ஏரோஸ்பேஸ் - ன் குளோபல் சப்ளை செயின் துறையின் மைக் காஃப்மேன் கூறினார். "இம் முதலீடு இந்தியாவில் ஏரோஸ்பேஸ் துறையில் எங்களின் வளர்ச்சியை மேலும் வலுவோடு உதவும்; அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எங்களுக்குத் தேவைப்படும் ஆதாரவளங்களை இது எங்களுக்கு வழங்கும்" என்று ஜிஇ ஏரோஸ்பேஸின் புனே தொழிலகத்தின் நிர்வாக இயக்குனர் அமோல் நகார் கூறினார்.

பிப்ரவரி 2015 இல் பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட இத்தொழிலகம், வணிக ரீதியிலான ஜெட் என்ஜின்களுக்கான பாகங்களை தயாரிக்கிறது. இத்தயாரிப்பு பொருட்கள் உலகளவில் அமைந்துள்ள ஜிஇ-ன் தொழிலகங்களுக்கு வழங்கப்படுகின்றன; இது உலகின் மிகவும் சக்திவாய்ந்த வணிக ரீதியிலான ஜெட் இன்ஜின்களாகத் திகழும் ஜி90, ஜி ஈ என் எக்ஸ், ஜி ஈ 9எக்ஸ் ஆகியவற்றின் அசெம்பிளி செயல்பாட்டில் அவை பயன்படுத்தப்படுகின்றன. ஜிஇ மற்றும் சஃப்ரான் ஆகிய இரு நிறுவனங்களின் கூட்டு முயற்சியான சி எஃப் எம் தயாரித்து வழங்கும் லீப் இன்ஜின்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஏரோஸ்பேஸ் துறையில் துல்லியமான பாகங்களின் உற்பத்திக்கான சிறப்பு செயல்முறையில் இந்தியாவைச் சேர்ந்த 5000 -க்கும் அதிகமான நபர்கள் பயிற்சி பெற இத்தொழிலகம் உதவியிருக்கிறது. ஐ எஸ் ஓ14001 & ஐ எஸ் ஓ45001 இன் கீழ் சான்றளிக்கப்பட்ட இந்த உற்பத்தி தொழிலகம், சமூகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சிறந்த நடைமுறைகளையும் மற்றும் வழிகாட்டலையும் உருவாக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, அதன் மின் நுகர்வில் 30% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கிடைக்கிறது. இத்தொழிலகம், பூஜ்ஜிய திரவ வெளியேற்றத் திறனைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 1 கோடி லிட்டர் தண்ணீரை (100 மில்லியன் லிட்டர்) இத்தொழிலகம் மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துகிறது மற்றும் 20 மெட்ரிக் டன் பிளாஸ்டிக்கையும் மறுசுழற்சி செய்கிறது.

# சீலிங் ஃபேன் தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சி ஏற்படுத்துகின்ற வகையில், பாலிகேப் இந்தியா, சைலன்சியோ மினி அட்வான்ஸ்ட் பி எல் டி சி மின்விசிறியை அறிமுகப்படுத்துகிறது



சென்னை, 09 ஏப்ரல் 2024: ஒரு முன்னணி எலக்ட்ரிக்கல் பொருட்கள் தயாரிப்பு நிறுவனமான பாலிகேப் இந்தியா லிமிடெட், சீலிங் ஃபேன்களில் சிறந்த வடிவமைப்புடன் ஆற்றல் திறன் மற்றும் செயல்திறனுக்கான ஒரு புரட்சிகரமான தரநிலையை அமைக்கின்ற பாலிகேப் சைலன்சியோ மினி மேம்பட்ட பி எல் டி சி மின்விசிறியை அறிமுகப்படுத்துகிறது. இந்த நவீன மின்விசிறியானது, நவீன வடிவமைப்பை 65% வரை மின்சாரத்தை சேமிக்கின்ற *, மேம்பட்ட பி எல் டி சி தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கிறது, இது மோட்டார் இரைச்சலைக் குறைக்கிறது மற்றும் குறைந்த மின்னழுத்தங்களில் கூட முழு செயல்திறனுடன் காற்று வீசுவதில் சமரசம் செய்யாமல் செயல்படுகிறது. சைலன்சியோ மினி மேம்பட்ட பி எல் டி சி மின்விசிறி உங்கள் மின் கட்டணத்தில் ரூ. 2,500/-* வரை ஆண்டுதோறும் சேமிக்க உதவுகிறது. இது ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவைகளுக்கு ஏற்ப 1200மிமீ, 900மிமீ மற்றும் 600மிமீ அளவுகளின் மாறுபாடுகளில் மற்றும் 9 வெவ்வேறு வண்ணங்களில் வருகிறது.

கேபிள்கள் மற்றும் வயர்களின் உற்பத்தியில் அதன் சிறப்பிற்காக நன்கு அறியப்பட்ட பாலிகேப், நவீன, டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்ட வீட்டிற்கு, ஒரு விரிவான மின் தீர்வுகளின் தொகுப்பை வழங்குவதற்கு அதன் எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளது. சைலன்சியோ மினி பி எல் டி சி ஃபேன் இன் இந்த அறிமுகமானது, இந்த நிறுவனத்தின் புதிய கோஷமான, 'ஐடியாஸ் கனெக்டெட்' உடன் சரியாக இணைகின்ற இந்த நோக்கத்தை பிரதிபலிக்கிறது.

பாலிகேப் சைலன்சியோ மினி பி எல் டி சி மின்விசிறியானது, பாலிகேப் இன் ஆற்றல் செயல்திறனில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகின்ற வகையில் ஒரு வியக்கவைக்கும் 5-நட்சத்திர பி ஈ ஈ மதிப்பீட்டை பெருமையுடன் உயர்த்துகிறது. சைலன்சியோ மினி சமீபத்திய ஆர் எஃப் பாயிண்ட் எனிவேர் ரிமோட் உடன் வருகிறது. மின்விசிறியில் இருந்து தூரமாக ரிமோட்டை இயக்கினாலும் செயல்படுகின்ற இது ஒரு புதிய தொழில்நுட்பமாகும். கூடுதலாக, இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு ரிமோட் வழியாக 50 மின்விசிறிகளை நீங்கள் இணைக்க முடியும். எனவே, உங்கள் வீட்டில் பாலிகேப் பி எல் டி சி மின்விசிறிகளைப் பயன்படுத்தினால், அனைத்து மின்விசிறிகளையும் ஒரே ரிமோட் மூலம் இணைக்க முடியும். சைலன்சியோ மினி, அல்டிமேட் 25 ஸ்பீடு செட்டிங் உடன் வருகிறது, இது உங்கள் தனிப்பயனாக்கப்பட்ட விசிறி வேகத்தை அமைக்க உதவுகிறது. அதன் பூஸ்ட்++ பயன்முறையில், இது ஒரு குறிப்பிடத்தக்க 380 ஆர் பி எம் அதிவேகத்தில் இயங்குகிறது, இது ஆண்டு முழுவதும் ஒரு குளிர்ச்சியான மற்றும் சௌகரியமான வாழ்க்கை சூழலை உறுதி செய்கின்ற 235 சி எம் எம் இன் ஒரு காற்று விநியோக திறன் கொண்ட சிறந்த காற்று சுழற்சியை வழங்குகிறது. ஒரு கச்சிதமான பி எல் டி சி மோட்டாருடன் வடிவமைக்கப்பட்ட இது ஆயுள் மற்றும் சிறந்த செயல்திறன் இரண்டையும் வழங்குகின்ற விசிறியின் தோற்றத்தை மேம்படுத்துகிறது மற்றும் பிளேடுகளை நீளமாகத் தோன்றச் செய்கிறது. இந்த விசிறியானது, ஒரு ரிவர்ஸ் ரொட்டேசன் மோட் ஐயும் கொண்டுள்ளது, இது குளிர்காலம் மற்றும் குளிரூட்டப்பட்ட அறைகளுக்கு ஒரு சரியான துணையாகும், ஏனெனில் இது ஒரு வன்காற்றை வீசாமல் காற்றை சுழற்றுகிறது.

சைலன்சியோ மினி மின்விசிறி ரூர்க்கி இல் உள்ள பாலிகேப் இன் உலகத்தரம் வாய்ந்த தயாரிப்பு தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. பாலிகேப் சிறந்த தயாரிப்பு தரத்தை உறுதி செய்வதற்காக சப்ளையர்களை உள்ளடக்குவதில் முதலீடு செய்வதை நம்புகிறது, எனவே, சைலன்சியோ மினி பி எல் டி சி மின்விசிறிக்கு தேவையான பி சி பி உற்பத்தியின் அகவலிமையை உருவாக்கியுள்ளது. வழக்கமான பிரீமியம் மின்விசிறியை விட 50% கூடுதல் உத்தரவாதத்துடன் சைலன்சியோ மினி பி எல் டி சி மின்விசிறிக்கு பாலிகேப் அதன் முழு ஆதரவை வழங்குகிறது. இது 3 வருட தயாரிப்பு உத்தரவாதத்தை வழங்குகிறது, பதிவுசெய்தவுடன் கூடுதல் ஒரு வருட உத்தரவாதத்துடன் மொத்தமான 4 வருட உத்தரவாதமாக மாற்றுகிறது. இந்த மின்விசிறி மூலம், பாலிகேப், வாடிக்கையாளருக்கு 4 ஆண்டுகளுக்கு முழுமையான மன அமைதியை உறுதிசெய்கிறது அதோடு உத்தரவாதக் காலத்தில் ரூ. 10,000/-* வரை சேமிப்பையும் வழங்குகிறது. நேச்சுரல் வால்நட் வூட், நேச்சுரல் வூட், பர்கின் கோல்ட், கூல் கிரே, மேட் எக்ஸ்பிரஸ்ஸோ பிரவுன், பேர்ல் பீஜ், பேர்ல் பிரவுன், மேட் சாடின் ஒயிட் மற்றும் மேட் பிளாக் உட்பட ஒன்பது வசீகரிக்கும் வண்ணங்களில் கிடைக்கின்ற இந்த சைலன்சியோ மினி 1200 மிமீ, 900 மிமீ மற்றும் 600 மி.மீ வீச்சு அளவுகளில் வருகிறது. இந்த விரிவான தெரிவுகளின் வரம்பு உங்கள் வரவேற்பறை, படுக்கையறை அல்லது பணியிடமாக இருந்தாலும், எந்தவொரு உள்துறை அலங்காரத்தையும் நிறைவு செய்கிறது. இந்த மின் விசிறி உங்கள் இடத்தின் அழகியல் ஈர்ப்பை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பாலிகேப் சைலன்சியோ மினி பி எல் டி சி மின்விசிறியானது உங்கள் அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாலிகேப் சில்லறை விற்பனையாளரிடம் இப்போது கிடைக்கிறது. இந்த மின்விசிறிகளின் விலை ரூ. 3200 முதல் 4500 வரை வரம்பில் இருக்கும். உங்கள் வாழ்க்கை இடங்களை மிகவும் வசதியாகவும் ஆற்றல் திறன்மிக்கதாகவும் மாற்றுவதற்கு, பாணி, செயல்திறன் மற்றும் அதிநவீன தொழில்நுட்பம் ஆகியவற்றின் சரியான இணைவை அனுபவியுங்கள்.

பாலிகேப் இந்தியா நிறுவனத்தின் செயல் தலைவர் மற்றும் தலைமை வணிக அதிகாரி (எஃப் எம் ஈ ஜி அண்ட் பவர்) இஷ்விந்தர் சிங் குரானா கூறும்பொழுது, "பாலிகேப் சைலன்சியோ மினி பி எல் டி சி மின்விசிறியின் இந்த அறிமுகம் ஆற்றல்-திறனுள்ள மின் தீர்வுகளில் முன்னணியில் இருப்பதற்கான எங்கள் உறுதியான அர்ப்பணிப்பை முக்கியப்படுத்திக் காட்டுகிறது. ஒரு வெறும் தயாரிப்பு என்பதை மீறி , இந்த புதுமையான மின் விசிறி வீட்டு சௌகரியத்தின் சூழலை மாற்றுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பின் சான்றாக நிற்கிறது. உயர்ந்த தொழில்துறை வரையறைகளை அமைப்பதன் மூலம், மின்விசிறியானது எந்தவொரு வீட்டின் அழகியலையும் பூர்த்திசெய்யும் வகையில் அதிநவீன தொழில்நுட்பத்தையும் அதிநவீன வடிவமைப்பையும் தடையின்றி ஒருங்கிணைக்கிறது. 40 ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாப்பான எலக்ட்ரிக்கல் பிராண்டாக அதன் நிலையை தக்கவைத்து, இப்போது சைலன்சியோ தொடர் பி எல் டி சி மின்விசிறிகள் மூலம் சௌகரியத்தையும் வசதியையும் நாங்கள் கொண்டு வருகிறோம். எங்கள் பி எல் டி சி மின்விசிறிகள் சைலன்சியோ தொடரினுள் பூஸ்ட்++ தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது, இது குறைந்த ஆற்றலைப் பயன்படுத்தும் அதே வேளையில் தனித்துவமாக அதிக காற்றை வழங்குகிறது. மேலும், இலவச நிறுவல் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் பராமரிப்பு உறுதிமொழியுடன் ஒரு சிறந்த அனுபவத்தை நாங்கள் வழங்குகிறோம்." என்று கூறினார். நவீன நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நம்பகமான மற்றும் ஆற்றல்-திறனுள்ள மின் தீர்வுகளை வழங்குவதில் பாலிகேப் இந்தியா தொடர்ந்து சந்தையில் முன்னணியில் உள்ளது.

டி&சி - *ஸ்டார் மதிப்பீடு அல்லாத 75டபிள்யூ சீலிங் ஃபேன்களுடன் ஒப்பிடும்போது சேமிப்பு. ஒரு மின்விசிறி ஒரு நாளைக்கு சராசரியாக பதினாறு மணி நேரம் ஓடுகிறது. ஒரு நாளைக்கு ஒரு மின் விசிறியின் சராசரி இயக்க நேரம் 16 மணிநேரம். ^மூன்று வருட தயாரிப்பு உத்தரவாதமும், பதிவு செய்தவுடன் ஒரு வருட கூடுதல் உத்தரவாதமும் மொத்த நான்கு வருட உத்தரவாதக் காலத்தைக் கொண்டுள்ளது.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் புதிய ‘அர்பன் க்ரூசர் டெய்சர்’ கார் அறிமுகம்




மும்பை, 09 ஏப்ரல் 2024: எஸ்யூவி வரிசையில் அனைத்து தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் செயல்திறனுடன் கூடிய தனது புதிய அர்பன் க்ரூசர் டெய்சர் காரை இந்தியாவில் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இதற்கான முன் பதிவு துவங்கி உள்ள நிலையில் ரூ.11 ஆயிரம் செலுத்தி முன் பதிவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இந்த காரை அடுத்த மாதம் டெலிவரி செய்ய இருப்பதாக இந்நிறுவனம் கூறியுள்ளது. எஸ்யூவி பிரிவில் இந்நிறுவனம் மீண்டும் நுழைந்ததைக் குறிக்கும் வகையில், தனது புதிய டொயோட்டா அர்பன் க்ரூசர் டெய்சர் காரை நவீன ஸ்டைலிங், அதிநவீன அம்சங்கள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் இந்திய வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வகையில் டொயோட்டா தயாரித்துள்ளது. இந்த புதிய கார் எஸ்யூவி பிரிவில் இந்நிறுவனத்திற்கு கூடுதல் வலிமை சேர்க்கிறது.

புதிய அர்பன் க்ரூசர் டெய்சர் கார் 1.0லி டர்போ, 1.2லி பெட்ரோல் மற்றும் இ-சிஎன்ஜி மாடல்களில் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப கிடைக்கிறது. 1.0 லிட்டர் டர்போ மாடல் 5 ஸ்பீடு மேனுவல் கியர் மற்றும் 6 ஸ்பீடு ஆட்டோமேட்டிக் கியர்களில் கிடைக்கிறது. 1.2லி பெட்ரோல் 5 ஸ்பீடு மேனுவல் கியர் மற்றும் இன்டெலிஜென்ட் கியர் ஷிப்ட் ஆகிய மாடல்களில் வருகிறது. இதேபோல் 1.2லி இ-சிஎன்ஜி 5 ஸ்பீடு மேனுவல் கியரில் கிடைக்கிறது.

இதன் 1.0 லிட்டர் டர்போ மாடல் கார் அதிகபட்சமாக 100.06 பி எஸ் @ 5500 ஆர்பிஎம் செயல்திறனை வழங்குகிறது, இதன் மேனுவல் கியர் கார் ஒரு லிட்டருக்கு 21.5 கிலோமீட்டரும் ஆட்டோமேட்டிக் கார் 20 கி.மீ. தூரம் செல்லும் திறன் கொண்டதாகும். 1.2 லிட்டர் பெட்ரோல் என்ஜின் அதிகபட்சமாக 89.73 பி எஸ் @6000 ஆர்பிஎம் ஆற்றலை வழங்குகிறது. இதன் மேனுவல் கியர் ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு 21.7 கி.மீட்டரும், ஆட்டோமேட்டிக் கார் 22.8 கி.மீட்டரும் தூரம் செல்லும் திறன் கொண்டதாகும். சிஎன்ஜி-ஐப் பொறுத்தவரை 1 கிலோவிற்கு 28.5 கி.மீ. செல்லும் திறன் கொண்டதாக உள்ளது.

புதிய காரை அறிமுகம் செய்து வைத்து பேசிய டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரும் தலைமை செயல் அதிகாரியும், டொயோட்டா மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியுமான மசகாசு யோஷிமுரா கூறுகையில், புதிய தயாரிப்புகள் அறிமுகம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் அறிமுகம் ஆகிய இரண்டிலும் இந்திய சந்தை எப்போதுமே எங்களுக்கு மிக முக்கியமானதாக உள்ளது. தற்போது இந்தியா, மத்திய கிழக்கு, கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா பிராந்தியத்தின் மையமாக செயல்படும் இந்திய சந்தை எங்களுக்கு இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இந்திய வாகனத் துறையில் புதிய தரத்தை நிலைநிறுத்த 25 ஆண்டுகால சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ள எங்கள் நிறுவனம் தரமான கார்களை இந்திய வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருவதோடு வரும் காலங்களிலும் இதே நிலை தொடரும்.

மேலும் முன்னோக்கிப் பார்க்கும்போது, இந்திய சந்தையில் எங்கள் வணிக உத்தியானது, உள்ளூர்மயமாக்கலின் தேசிய முன்னுரிமைகளில் தொடர்ந்து கவனம் செலுத்துவது, மிகவும் திறமையான பணியாளர்களை உருவாக்குவது மற்றும் கார்பன் வெளியேற்றம் இல்லாத இலக்குகளை அடைவதும் ஆகும். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அர்பன் க்ரூசர் டெய்சர் மூலம், வாடிக்கையாளர்களின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தேர்வுகளை விரிவுபடுத்துவதன் மூலம், 'அனைவருக்கும் நிறைவான மகிழ்ச்சியை' வழங்குவதன் மூலம் நாங்கள் எங்கள் நிலையை மீண்டும் நிரூபித்துள்ளோம் என்று தெரிவித்தார்.

டொயோட்டா மோட்டார்ஸ் மற்றும் லெக்சஸ் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார் விற்பனை - சேவை பிரிவின் துணை நிர்வாக இயக்குனர் தடாஷி அசுமா கூறுகையில், எங்கள் பல்வேறு வாகனங்களின் வரிசையில் கூடுதலாக, எங்களின் புதிய அர்பன் க்ரூசர் டெய்சர் காரை அறிமுகப்படுத்தியது என்பது ஒரு முக்கியமான தருணம் ஆகும். பல ஆண்டுகளாக, வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் வாழ்க்கை முறை விருப்பங்களுக்கு ஏற்ப நாங்கள் எங்கள் தயாரிப்புகளை அறிமுகம் செய்து அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம் என்று தெரிவித்தார். டொயோட்டா மோட்டார்ஸ் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார் விற்பனை - சேவை பிரிவின் துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், எங்களின் புதிய அர்பன் க்ரூசர் டெய்சர், சிறந்த செயல்திறன், சிறந்த எரிபொருள் திறன் மற்றும் டொயோட்டாவின் எஸ்யூவி பாரம்பரியத்துடன் தொடர்புடைய பெருமையின் உணர்வை வழங்கும் வெளிப்புற வடிவமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. அதன் தனித்துவமான மற்றும் ஸ்டைலான வெளிப்புற வடிவமைப்பு, வடிவம் மற்றும் செயல்பாட்டை இணைத்து, காட்சி முறையீடு மற்றும் செயல்திறன் இரண்டையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த புதிய எஸ்யூவி மேம்பட்ட பவர் டிரெய்ன் தொழில்நுட்பத்தையும் ஒருங்கிணைத்து, சிறந்த செயல்திறனை வழங்குகிறது. மேலும், 6 ஏர்பேக்குகள் கொண்ட பாதுகாப்பு அம்சங்கள், மலைகளில் பாதுகாப்பாக செல்லும் திறன் மற்றும் ரோல் ஓவர் மிடிகேஷன் உடன் வாகன கட்டுப்பாடு உள்ளிட்ட மேம்பட்ட அம்சங்களுடன் பாதுகாப்பான ஓட்டுனர் அனுபவத்தை உறுதி செய்யும். ஹெட்-அப் டிஸ்ப்ளே, 360 வியூ கேமரா, வயர்லெஸ் சார்ஜர் மற்றும் வயர்லெஸ் ஆப்பிள் கார்ப்ளே மற்றும் ஆண்ட்ராய்டு ஆட்டோ இணைப்புடன் கூடிய (9") எச்டி ஸ்மார்ட் பிளேகாஸ்ட் இன்போடெயின்மென்ட் சிஸ்டம் போன்ற நவீன தொழில்நுட்ப அம்சங்கள் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியான பயணத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றன என்று தெரிவித்தார்.